# மணிச்சிகை

## காலாண்டு மின்னிதழ்

மலர் : 1 அக்டோபர் - திசம்பர் 2024 இதழ் : 4



# மணிச்சிகை

காலாண்டிதழ்

**அக்டோபர் - திசம்பர் 2024**

**இதழ் - 4**



பதிப்பாசிரியர்

முனைவர் ஜெ.போ.சாந்திதேவி

முதன்மை ஆசிரியர்

முனைவர் கோ.சுப்புலெட்சுமி

பொறுப்பாசிரியர்

வீ.அதிவீரபாண்டியன்

ஆசிரியர் குழு ( பேராசிரியர்கள் )

முனைவர் மா.செல்வத்தரசி

முனைவர் ஜெ.கோகிலா

முனைவர் அ.நந்தினி

முனைவர் தி.பிருந்தா

ஆசிரியர் குழு ( மாணவர்கள் )

அ. முகம்மது இஸ்மாயில் - பி.ஏ III

கோ.ஜா நான்சி எல்பின் - பி.லிட் III

ம. யோகஶ்ரீ - பி.ஏ III

சு. ராஜமாலதி - பி.ஏ III

இரா.புனிதவள்ளி - எம்.ஏ II



மின்னஞ்சல் :

manicchikai2023@gmail.com


**கட்டுரைகள்**


1. அழகிய தமிழ் மகன்
   - முனைவர் கோ.சுப்புலெட்சுமி .................. 6
2. சிலப்பதிகாரத்தில் அறச்சிந்தனைகள்
   - ம.யோக ஶ்ரீ............................................ 13
3. சைவ மங்கையர் மடங்கள்
   - முனைவர் ஜெ.கோகிலா ............................ 19
4. சிறுபாணாற்றுப்படையில் தொல் தமிழர் பண்பாடு
   - முனைவர் மா.செல்வத்தரசி........................ 24
5. சிலம்பில் கண்ணகியின் மாண்பு
   - முனைவர் பெ.இந்துராணி ........................ 31
6. மதுரையின் அறிவுத் திருவிழா
   - இரா.ஹம்ஷ் வர்த்தினி, க.ராமசுந்தரி, ...... சோ.நிஷா 38


**சிறுகதைகள்**


1. புதிய நம்பிக்கை - முனைவர் மு.செந்தில்குமார் ....... 10


**கவிதைகள்**


1. செங்கோன்மை – தி.ர.செயலட்சுமி....................... 9
2. தேனீர் – இரா.புனிதவள்ளி.............................. 18
3. கொஞ்சு(ச)ம் ஐக்கூ – அ.முகமது இசுமாயில் ........ 23
4. ஆறாத சினம் - ர.அழகுபாண்டி............................ 37


**புத்தக மதிப்புரை**


1. அன்பிற்கினியாள் - இரா.புனிதவள்ளி .............. 17
2. பசிகொண்ட இரவு – மு.சிவசங்கரி......................... 29


**ஓவியம்**


1. ம.ராஜராஜேஸ்வரி......................................... 36

# பதிப்புரை



முனைவர் ஜெ.போ.சாந்திதேவி
முதல்வர்(பொ), செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் நல்ல நோக்கோடு 'மணிச்சிகை' எனும் காலாண்டு மின்னிதழ் கடந்த சனவரி மாதம் தொடங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக நான்காவது இதழ் தற்போது வெளிவருகிறது. ஆறு கட்டுரைகள், நான்கு கவிதைகள், ஒரு சிறுகதை, இரண்டு புத்தக மதிப்புரை, ஓவியம் என மொத்தம் 14 படைப்புகள் இவ்விதழுக்கு மணம் பரப்புகின்றன. பேராசிரியர்கள் மாணவர்களால் படைக்கப்பட்ட கட்டுரைகள், கவிதைகள் இடம் பெற்று நிறுவனத்தின் தமிழ்ப் பற்று, மொழி ஆளுமை, மொழிவளச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு மாணவர்களின் கட்டுரையும் மிகச்செறிவாகவும் நல்ல மொழி நடையுடனும் அமைந்து அவர்களின் திறனுக்கு சான்று பகர்வனவாய் அமைகின்றது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் தமிழின் மாண்பினைக் காக்க வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர், மன்னர் பாசுகர சேதுபதி ஆகியோரது அரும்பெரும் முயற்சியின் விளைவால் நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. மொழிநலச் சிந்தனைக்காகவும் மக்களுக்க்காகவும் தம் வாழ்நாளைச் செலவிட்ட மன்னர் பாசுகரசேதுபதியின் 136 ஆவது பிறந்தநாளில் (03.11.2024) அவரது நினைவினைப் போற்றும் வகையில் மன்னர் பாசுகர சேதுபதியின் சில குறிப்புகளும் இம் மலருக்கு அணிசேர்க்கிறது.

கொண்ட நோக்கம் கொஞ்சமும் சிதைந்திடாமல் சிறப்புடன் வெளிவரும் இவ்விதழை மாணவர்கள் நுகர்ந்து மன(ண)ம் கொள்ள வேண்டும். படைப்புகள் தந்த மாணவர்களுக்கும் படித்து மகிழ்வோருக்கும் வாழ்த்துகள்.

# மன்னர் பாசுகர சேதுபதி

துரைராஜா (எ) முத்துராமலிங்க சேதுபதி இறக்கும்போது அவரது மூத்த மகன் பாஸ்கர சேதுபதி ஐந்து வயது பாலகனாக இருந்தார். பிரிட்டிஷ் துரைத்தனத்தார் இராமநாதபுரம் ஜமீன்தாரி நிர்வாகத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டனர். அத்துடன் இராஜ குடும்பத்தைப் பராமரித்து வந்ததுடன் பாஸ்கர சேதுபதிக்கும் அவரது தம்பி தினகர சேதுபதிக்கும் கல்வி புகட்டும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டனர். அதற்காக அந்தச் சிறுவர்கள் இருவரையும் சென்னைக்கு அனுப்பி ஆங்கில ஆசான்கள். தாதிமார்கள், பணியாட்கள் ஆகியோரை அவர்களுக்கென நியமித்து முறையாகக் கல்வி பெறுவதற்கு ஏற்பாடு செய்தனர். கி.பி. 1888-ல் பாஸ்கர சேதுபதி சென்னை கிறுத்தவக் கல்லூரியிலிருந்து பட்டதாரியாக வெளி வந்தவுடன் இராமநாதபுரம் ஜமீன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவரது 12 வருட நிர்வாகத்தில் பல கண்மாய்களும், நீர்ப்பாசன ஆதாரங்களையும் பழுது பார்க்க ஏற்பாடு செய்தார். பெரும்பாலும் சமஸ்தானத்தின் பல பகுதிகளுக்கும் சாலை வசதி இல்லாத அந்தக் காலத்தில் பல்லக்கிலே பயணம் செய்து மக்களது வாழ்க்கை நிலையையும், தேவைகளையும் அறிந்து வந்தார்.



இவர் சிறந்த சைவ சித்தாந்தியாக இருந்து வந்ததால் இராமநாதபுரம் சீமை சமஸ்தான கோவில்களில் ஆகம முறைப்படி வழிபாடுகளும் விழாக்களும் நடந்து வர ஏற்பாடு செய்தார்.

இந்த மன்னர் பொருள் வசதி குறைந்த ஜமீன்தார் அமைப்பு முறையிலே இயங்கி வந்தாலும் இவரது இதயம் அவரது முன்னோர்களைப் போன்று விசாலமானதாகவும் ஆன்மீகப் பணியில் பற்றுக் கொண்டதாகவும் அமைந்து இருந்தது. இவரது ஆட்சிக் காலத்தில் நொச்சிவயல் பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது ஆகும். இராமநாதபுரம் கோதண்டராம சுவாமி திருக்கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இராமேஸ்வரம் இராமநாத சுவாமி திருக்கோயில், இராமநாதபுரம் இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் ஆகியன திருப்பணி செய்யப்பட்டன. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலும், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலும், திருச்செந்தூர், பழனி, முருகன் ஆலயங்களிலும் சிதம்பரம் நடராஜர் ஆலயத்திலும், காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலிலும் உச்சி காலக் கட்டளைகளை ஏற்படுத்தினார். அவைகள் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சென்னை கபாலீஸ்வரர் கோயில் இறைவர் பவனி வருவதற்காகவும், காளையார் கோவில் காளைநாதர்

கோவிலுக்கும் புதிய பல்லக்குகளைச் செய்து கொடுத்ததுடன் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி உலா வர வெள்ளித் தேர் ஒன்றினையும் செய்து வழங்கினார். இராமநாதபுரம் ராஜேஸ்வரி அம்மன் பயன்பாட்டிற்காகச் சிம்ம வாகனம் ஒன்றினை அமைத்து அதனை முழுதுமாக தங்கத் தகட்டினால் நிறைவு செய்து அகமகிழ்ந்தார். மேலும் ராஜேஸ்வரி அம்மன் கோயில் கோபுரத்தையும் பொன் தகடுகளால் வேய்ந்து உதவினார். இவரது காலத்தில் தான் இராமேஸ்வரம் திருக்கோயிலின் முதலாவது குட முழுக்கு 1.11.1902-ல் நடைபெற்றது.

இவைகளையெல்லாம் விஞ்சிய சாதனை ஒன்றையும் படைத்தார். அதாவது 14.9.1893-ஆம் நாள் அமெரிக்க நாட்டு சிக்காகோ நகரில் நடைபெற்ற அனைத்து உலக சமயப் பேரவைக்குச் சுவாமி விவேகானந்தரைத் தனது சொந்தச் செலவில் அனுப்பி வைத்து நமது நாட்டின் பழம் பெருமையினை உலகு அறியச் செய்ததாகும்.

இவரது பாடல்கள் ஆலவாய்ப் பதிகம், இராமேஸ்வரர் பதிகம். காமாட்சி அம்மன் பதிகம். இராஜேஸ்வரி பதிகம் ஆகியன மட்டும் கிடைத்துள்ளன. மேலும் 14.9.1901-ல் மதுரை மாநகரில் வள்ளல் பாண்டித்துரை தேவர் நான்காம் தமிழ்ச்சங்க நிறுவ அவருக்குத் தக்க துணையாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் ஒரு சிறந்த சைவ சித்தாந்தியாக இருந்து வந்ததால் இராமநாதபுரம் அரண்மனையில் இவரது முன்னோர்களால் பிரதிட்டை செய்து வழிபாடுகள் நடத்தப்பட்டு வந்த பூரீ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்று வந்த உயிர்ப் பலியினை இவரது மனம் பொறுத்துக்கொள்ள வில்லை. ஆதலால் அப்பொழுது கர்நாடக மாநிலத்தில் சிறப்புற்று விளங்கிய சிருங்கேரி மடாதிபதியான ஸ்ரீ நரசிம்ம பாரதி அவர்களை வரவழைத்து இராஜேஸ்வரி ஆலயத்தின் உயிர்ப்பலி வழிபாட்டினை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தார்.

அந்த ஆலயத்திற்கு வருகை தந்த சிருங்கேரி சுவாமிகள் புதிய சக்கரம் ஒன்றை கருவறையில் ஸ்தாபித்து, ஏனைய திருக்கோயில்களில் நடைபெறுவது போன்ற வாம பூஜையை அங்கும் கைக் கொள்ளுமாறு அர்ச்சகர்களுக்கு அறிவுறுத்தினார். அன்றிலிருந்து அந்த ஆலயத்தில் உயிர்ப்பலி கொடுப்பது நிறுத்தப்பட்டது.

சிருங்கேரி மடாதிபதிகள் மன்னர் பாஸ்கர சேதுபதியின் ஒய்வு மாளிகையான சங்கர விலாசத்தில் தங்கியிருந்த பொழுது நிகழ்ந்த மிகவும் முக்கியமான நிகழ்ச்சி, ஒன்றினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

வழக்கம் போல ஒரு நாள் முற்பகலில் மன்னர் பாஸ்கர சேதுபதி சுவாமிகளைச் சந்திப்பதற்காக அங்கு வந்தார். அப்பொழுது சுவாமிகள் தாம் இராமநாதபுரத்திற்கு வருகை தந்த பணி முடிவுற்றதால் ஊருக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதை தெரிவித்தார். அத்துடன் தமது பணிக்காக மன்னர் குரு தட்சணையாக எதனைக் கொடுக்க விரும்புகிறார் என வினவினார். உடனே மன்னர் நாம் அணிந்திருந்த அரச சின்னங்களை அழகிய தலைப்பாகையையும் உடை

வாளையும் சுவாமிகளது திருவடிகளில் சமர்ப்பித்து, "இந்த சேது சமஸ்தானத்தை எனது குரு தட்சணையாக அருள் கூர்ந்து சுவாமிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்." என பணிவுடன் கேட்டுக்கொண்டார். சற்றும் எதிர்பாராத மன்னரது அந்த பதிலைக் கேட்ட சுவாமிகள் மிகவும் வியப்புக்குள்ளானார். ஒருவாறு நிலைமையை சமாளித்துக்கொண்டு, 'இயல்பாகவும் வேடிக்கையாகவும் தான் குருதட்சணை கோரினேன் தங்களது அன்பும் ஆன்மீக உணர்வும் மிக்க இந்த தானத்தை நான் ஏற்றுக் கொண்டேன். ஆனால் அதனை தங்களது குமாரருக்கு நான் தானம் வழங்கிவிட்டேன்." என்று சொல்லி மன்னரது அருகில் நின்று கொண்டிருந்த மன்னரது மகன் முத்து ராமலிங்கத்தின் தலையில் தலைப்பாகையை அணிவித்து இடையில் உடைவாளையும் அணிவித்தார். அப்பொழுது அங்கிருந்தவர்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் ஒரு அதிசய சாதனையாகத் தோன்றியது. இது நடத்து கி.பி. 1894ல்.

ஏற்கனவே இந்த மன்னருக்கு தமிழ்ப்பணியில் மிகுந்த ஈடுபாடு இருந்ததால் தமது அவைப்புலவர் மகா வித்துவான் இரா. இராகவ ஐயங்கார் சுவாமிகளை ஒரு பல்லக்கில் அமர வைத்து ஏனைய பல்லக்கு போகிகளுடன் தாமும் நின்று அந்தப் பல்லக்கை சுமந்து தாம் தமிழுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் கட்டுப்பட்டவர் என்பதை உலகறியச் செய்தார். மேலும் இந்த நிகழ்ச்சியினைக் குறிப்பிட்டு வரைந்து ஒரு பத்திரம் ஒன்றையும் மதுரை பதிவாளர் அலுவலத்தில் 4.11.1901ல் பதிவு செய்து கொடுத்தார். இந்தப் பத்திரத்தின்படி தமிழ் மொழியினை வளர்ப்பதற்கும் தமிழ்ப்புலவர்களைக் காப்பதற்கும் தாம் கடமைப்பட்டவர் என்பதை குறிப்பிட்டு இருப்பதுடன் அந்த அழகிய பல்லக்கை மகாவித்துவான் அவர்கள் இராமநாதபுரம் அரண்மனைக்கு வந்து செல்ல பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அதற்கான நிவந்தமாக ரூபாய் 360 இராமநாதபுரம் சமஸ்தான கருவூலத்திலிருந்து 6 மாதங்களுக்கு ஒருமுறை பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அந்த ஆவணத்தில் பதிவு செய்துள்ளார்.

சிறந்த சொற்பொழி வாளராகவும், தமிழ்ப்புலவராகவும் வரையாது வழங்கும் வள்ளலாகவும் வாழ்ந்த இந்த மன்னர் கல்லிடைக்குறிச்சியில் உள்ள திருவாவடுதுறை மடத்திற்குச் சென்றிருந்தபோது 27.12.1903-இல் காலமானார். ஜமீன்தாரி ஆட்சி காலத்தில் இவருடைய ஆட்சிகாலமே பொற்காலமாகும்.

நன்றி : **சேதுபதி மன்னர் வரலாறு, Dr. எஸ். எம். கமால்**

# அழகிய தமிழ் மகன்



**முனைவர் கோ.சுப்புலெட்சுமி**
துணை முதல்வர்

தலைப்பைப் பார்த்தவுடன் ஏதோ திரைப்பட தலைப்பு போல இருக்கிறதே என்று நினைப்போம். ஆனால், இது தமிழ்க் கடவுள் ஆகிய முருகப்பெருமானுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை விளக்கும் கட்டுரை.

முருகு என்றால் அழகு என்று பொருள், தமிழ், அழகு இரண்டும் மூன்றெழுத்து கொண்டவை. தமிழ் என்ற சொல் 'த' வல்லெழுத்து 'மி' மெல்லெழுத்து 'ழ்' இடை எழுத்து அதே போல முருகு என்பதில் 'மு' என்பது மெல்லெழுத்து 'ரு' என்பது இடையின எழுத்து 'கு' என்பது வல்லெழுத்து. உயிர் எழுத்து தமிழில் 12 அதேபோல முருகப்பெருமானின் கரங்கள் பன்னிரண்டு. மெய்யெழுத்து 18 முருகப்பெருமானின் முகத்தில் 18 கண்கள். இன எழுத்துக்கள் ஆறு முருகப்பெருமானின் படை வீடுகள் ஆறு சரவணபவ என்ற அவரின் மந்திரமும் ஆறு. ஆயுதம் எழுத்து தனிநிலை, அது முருகப்பெருமானின் வேல் போலக் காணப்படும். ஒரு பெண் வயிற்றில் குழந்தை இருக்கின்ற காலம் 247 மொத்த தமிழ் எழுத்துக்கள் 247 இப்படி முருகனுக்கும் தமிழுக்குமான தொடர்பைச் சொல்லிக் கொண்டே செல்லலாம். முருகப்பெருமானைத் தமிழ்க் கடவுள், தமிழ்ப் புலவர், தமிழ் வினோதன், தமிழ்க் குரு தமிழ்ப்பிரியர், தமிழ் பித்தர், தமிழ் மருந்துண்பான் என்று பலவகையாகப் புலவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அகத்தியர் காசியில் இருக்கும் சிவபெருமானை வணங்கி "மகிழ்ச்சி திளைக்கும் செந்தமிழ் எனும் திருத்தகு பாடை தந்தருள் ஞானமும் தந்தருள்" என்று வேண்டுகிறார். அப்போது சிவன் காவி கிரி என்று அழைக்கப்படும் திருத்தணிகை சென்று அங்கே ஞானசக்தி தரன் என்று விளங்கும் முருகனிடம் வேண்டி உன் வரத்தைப் பெற்றுக் கொள் என்று சொல்கின்றார். அதனால் அகத்தியர் திருத்தணிகை முருகனிடம் வணங்கி தமிழ் அறிந்தார் என்று சொல்லப்படுகிறது. இதனை "சிவனை நிகர் பொதிகை வரை முனிவன் அகமகிழ இரு செவி குளிர இனிய தமிழ் பகர்வோனே" என்று திருப்புகழ் உணர்த்துகிறது.

சுந்தரபாண்டியன், தடாகை பிராட்டி ஆகியோருக்கு உக்கிர பெருவழுதியாய் முருகப்பெருமான் அவதாரம் எடுத்த போது தமிழ்ச் சங்கத்தில் புலவராக இருந்து தமிழ் ஆய்ந்தார் என்று புராணங்கள் குறிப்பிடுகிறது. "கூடல் புறந்தொருகால் கூடல் புலவர் எதிர் பாடல் அறிவித்த படைவேளும்" என்று தமிழ்விடு தூது இந்த செய்தியை உணர்த்துகிறது.

ஒருமுறை தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கு இடையே யார் பெரியவர் என்று மோதல் ஏற்பட்டது. அப்போது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இருக்கும் சிவனிடம் அனைவரும் முறையிட்டபோது நீங்கள் உங்கள் பாடல்களை இங்கே செட்டி வீதியில் இருக்கும் உருத்திர சன்மன் என்ற மூங்கை குழந்தையின் முன் பாடுங்கள் அந்தக் குழந்தை யார் பாடல் சிறந்தது என்று சொல்கிறதோ அவர்களே சிறந்த புலவர்கள் என்று தீர்ப்பாக எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார். மூங்கைக் குழந்தை எப்படி உணர்த்தும் என்று அவர்கள் கேட்டபோது அந்த பிள்ளை புளங்காகிதம் அடைந்து கண்ணீர் துளிர்த்து மெய்ப்பாடுகள் மூலம் சிறந்த கவிதையை தேர்ந்தெடுக்கும் என்று சொன்னார். அப்படி உருத்தர சன்மன் என்ற பெயரில் மூங்கை குழந்தையாக அவதாரம் எடுத்து சங்கப் புலவர்களில் வளமுறுகீரன், மாசறு பரணர், தரைப் புகழ்க் கபிலர் என்ற மூவரையும் சிறந்த புலவராக அந்தக் குழந்தை தேர்ந்தெடுத்தது. இந்த குழந்தையாக முருகப்பெருமான் அவதாரம் எடுத்தார் என்று கூறப்படுகிறது. இப்படி சங்கப் புலவர்களின் கலகம் தீர்த்து தமிழ் ஆய்ந்தவராக விளங்கி இருக்கிறார்.

சங்கப் புலவராகிய நக்கீரர் சிவனைத் தவிர வேறு எவரையும் நான் பாடேன் என்ற ஒரு விரதத்தோடு இருந்தார். திருப்பரங்குன்றத்து முருகன் அவர் வாயால் தமிழ் கேட்க வேண்டும் என விரும்பி அண்டா பரணர் உக்கிரமூர்த்தி என்ற தன்னுடைய பூதங்களை அனுப்பி அவரை தூக்கி வந்து குகை அடைக்க ஏவினார். அவர் தவத்தில் இருந்தபடியினால் அவரை பூதங்களால் தூக்க இயலவில்லை. அப்போது சரவணப் பொய்கை கரையில் இருந்த மரத்திலிருந்து ஒரு இலை பொய்கையில் விழ பாதி மீனாகவும், பாதி பறவையாகவும் துடித்தது. அதைப் பார்த்து நக்கீரரின் தவம் கலைய அவரைக் குகைக்குள் தூக்கிச் சென்று அடைத்தன பூதங்கள். பிறகு முருகப்பெருமானை வேண்டி திருமுருகாற்றுப்படை பாடினார். அதற்கு முருகனே 'உலகம்' என்று அடி எடுத்துக் கொடுத்தார். இந்த செய்தியை "பழுத்தமுது தமிழ்ப்பலகை இருந்த ஒரு கவிப்புலவன் இசைக்கு உருகி வரைக் குகையை இடித்து வழி காணும்" என்று வேல்மாறல் உணர்த்துகிறது.

தமிழ் மூதாட்டியான ஔவை பிராட்டி பல்வேறு பாடல்களைப் பாடி வந்த காலகட்டத்தில் அவருக்கு தன் அறிவின் மீது சிறிது கர்வம் இருந்தது. அதனைத் தீர்க்க வேண்டும் என்று மாடு மேய்க்கும் சிறுவனாக முருகப்பெருமான் காட்சியளித்து நாவல் மரத்தின் மேல் அமர்ந்து "பாட்டி சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா" எனக் கேட்டு திருவிளையாடல் செய்து அவ்வையின் கர்வத்தைப் பங்கம் செய்து அருளினார். அதன் பிறகு முருகப்பெருமான் வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப கொடியது எது, பெரியது எது, இனியது எது, அரியது எது என்பதற்கு அவ்வையார் தனிப்பாடலாகப் பாடி அருளினார்.

முருகப்பெருமான் ஞானசம்பந்தர் ஆக அவதாரம் செய்து தமிழ் பரப்பிய லீலை குறித்து சம்பந்தரை முருகனாக வைத்து அருணகிரிநாதர் திருப்புகழிலும் கந்தர் அந்தாதியிலும் பாடியுள்ளார். ஒட்டக்கூத்தர் தக்கையாகப் பரணியிலும் இது பற்றிய செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

பொய்யா மொழிப் புலவர் சிவனை மட்டுமே பாடுவேன் வேறு எவரையும் பாடமாட்டேன் என்று இருந்த அந்தப் புலவரை வறுமை வரச் செய்து தன்னையும் பாட வைத்தவர்.

அருணகிரி யாரிடம் முத்தைத்தரு என்ற அடி எடுத்துக் கொடுத்து 16,000 பாடல் பெற்றவர் கச்சியப்ப சிவாச்சாரியாருக்கு திகடச் சக்கர என்று அடி எடுத்துக் கொடுத்து கந்தபுராணம் பாட வைத்தார்.

இப்படியாக முருகப்பெருமான் தமிழுக்காகப் பல விளையாடல்களை ஆடி புலவர்களோடு சோதனை செய்து தமிழ் ஆய்ந்தார். அதனால் அழகிய தமிழ் மகன் என்ற பெயர் முருகப்பெருமானைச் சேரும்.

## பிழையின்றி எழுதுவோம்

### பொருள்கள் / பொருட்கள் எது சரி ?

பொருள்கள் பலவுள; பொருள்களை எடுத்துவை; ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. இவ்வாறு 'பொருள்கள்' என்பதே சரியானது. இதைப் 'பொருட்கள்' என்பது தவறு. அறிஞர்களும் 'பொருட்கள்' என எழுதிவிடுகின்றனர். காரணம் பொருட்சிறப்பு, பொருட்பேறு, பொருட்காரணம் எனப் பிற இடங்களில் வருவதால், 'ஒப்புமையாக்கவுணர்வினால்' தம்மை மறந்து இத் தவற்றைச் செய்து விடுகின்றனர். ஒலி ஒப்புமையால் செல்வர் - செல்வந்தர் ஆனது போன்ற பிழை இது

'கள்' விகுதி பிற்காலத்தது. பொருளினது சிறப்பு பொருட்சிறப்பு. கள் விகுதி, தனிச்சொல் அன்று. எனவே பொருள்கள் என்பதே சரி, சுருள்கள் என்பதைச் சுருட்கள் என்று சொல்லிப் பாருங்கள். ஒலி ஒப்புமை,ஒலி இயைபு, ஒலி இனிமை போன்றவை கருதிப் 'பொருட்கள்' எனப் பலர் எழுதி விடுகின்றனர். என் செய்வது? அது தேவை இல்லை. 'பொருள்கள்' என்றாலே போதும். அதுவே மொழிச்செப்பத்தின் பாற்படும்.

நன்றி : **தமிழில் அடிக்கடி நேரும் பிழைகள் – பேராசிரியர் தமிழறிஞர் தமிழண்ணல்**

# செங்கோன்மை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

அரச ணாண்டி எனப்பகுப் பில்லை
ஆசை கொண்டா லரசே யில்லை
இன்றும் யென்றும் செங்கோல் வேண்டும்
ஈகை செய்ய நன்மனம் வேண்டும்
உண்மை நிலைக்க கழிவு கலைக்க
ஊழில் லாத உலகம் வருமே
எல்லா மக்களின் கையில் செங்கோல்
ஏழை கூட அதிலே பங்காள்
ஐயம் இன்றி வாழும் வழியே
ஒன்று என்கிற மனமே ஓங்கும்
ஓங்கி அதுவே அறத்தை காக்கும்
ஔடதம் எனவும் மாறும் நடுநிலை
அதிலே அஃகு கிட்டும் கோக்கும்
கள்ளம் கொள்ள மனமே காவல்
சட்டம் சகதி ஆகா செங்கோல்
ஞானம் கொண்டே ஞாலம் தழைக்க
தன்னின் முடிவில் நீதி கொள்ளும்
நடக்கும் முறையில் மீதி கொள்ளும்
பாரே வியக்கும் பாரதம் செய்வோம்
மக்கள் வாழ்ந்திட புதுவிதி செய்வோம்
யாவரும் கேளிர் யாவரும் கொள்ள
வந்தோர் நல்வாழ் கிட்டி வாழ
நிதியால் வேண்டா நீதியே நிவாரணம்
சமத்துவம் வேண்டும் சாகும் வரை
என்றும் சாகா செங்கோல் வாழுமே !



**தி.ர. ஜெயலட்சுமி**
இளங்கலை இலக்கியம் மூன்றாமாண்டு



# புதிய நம்பிக்கை

**முனைவர் மு.செந்தில்குமார்**
உதவிப் பேராசிரியர்

வெயில், மழை, தகரத்தின் ஓட்டை வழியே எப்போதும் வரும் போகும். மழையில் கரைந்து போன சுவர். சாணம் பூசாத தரை, மூலையில் இடியத் தயாராயிருக்கும் அடுப்பு. அதிகபட்சம் மூன்று பேருக்கு மேல் தூங்கி எழமுடியாத வீடு, வாசற் படியில் கதவுக்குப் பதில் கிழிந்த சாக்கு நீளமாய் தொங்கிக் கொண்டிருந்தது.

வெள்ளைச் சட்டை அழுக்கேறி கலர்ச் சட்டை போல் இருந்தது. வடித்த கஞ்சித் தண்ணியை ஊற்றியதைப் போல டவுசரில் திட்டுத்திட்டாய் இருந்தது. எண்ணெய் தேய்க்காமல் சரிவர தலைவாராத முடி, கை, கால்களில் சொறி தாராளமாய் இடம் பிடித்திருந்தது. முகம் கழுவாமல் இருட்டாயிருந்தது. காதறுந்த மஞ்சள் துணிப்பையோடு பள்ளிக்குப் புறப்பட்டான் சுரேஷ்.

“உள்ளத்தைப் பண்படுத்த உணர்ச்சியை அடக்கு. வளர்ச்சியைப் பெற கிளர்ச்சியைக் கை விடு" என்ற பொன் மொழியோடு பாட வேளைகள் துவங்கின. எட்டாம் வகுப்பு -ஆ பிரிவு முதல் பாட வேளையில் ஆங்கில ஆசிரியர் நுழைந்தார்.

வணக்கம், வருகைப்பதிவு முடிய, "சரிப்பா நேத்து என்னா படிச்சிட்டு வரச் சொன்னேன். படிக்காதவங்க நில்லுங்க" என்றார். 60 மாணவர்களில் 20க்கும் மேல் நின்றனர். குச்சிக்கம்பை கையிலெடுத்து மாணவ மாணவியர்களை கையை நீட்டச் செய்து அடித்தார். 'ச்', 'ஆ', 'அம்மா', 'ஐயோ' மாணவர்கனின் குரல் ஒவ்வொரு அடியிலும் மாறுபட்டு ஒலித்தது. "ஏண்டா தெனமும் இப்படி 20 பேருக்கும் மேல படிக்காம வந்தா, அடுத்த பாடத்த நடத்தி என்னடா பிரோஜனம்? ஒழுங்கா இப்பவே படிச்சு ஒப்பிங்க, உங்களை நெனச்சாலே டென்சன் உச்சிக்கு வருது" என்றபடி இருக்கையில் அமர்ந்தார்.

கடைசி பெஞ்சில் சுரேஷ் உட்கார்ந்திருந்தான். ஒவ்வொரு பெஞ்சிற்கும் ஐந்து பேர். இவனது பெஞ்சில் மூன்று மாணவர்கள் மட்டும். மூவரும் தனித்தனியாய் அமர்ந்திருந்தனர். “டேய் கோபி, சுரேசு குடுத்து வச்சவண்டா படிக்க வேண்டிய அவசியமில்லை. எழுத வேண்டிய அவசியமில்லை, எதுக்கும் கவலப்பட வேண்டியதில்லை" என்றான்.

"ஏலே சுரேசு மொறச்சு பாக்குறாண்டா பேச்ச நிறுத்து".

பாடவேளை முடியும் நேரத்தில், "டேய், நாளைக்கு படிச்சிட்டு வராட்டி நடக்குறதே வேற" என்றபடி வெளியேறினார் ஆசிரியர். "ஆமாண்டா தெனமும் இதத்தான சொல்றாரு... ஆனா சுரேச மட்டும் என்னா செஞ்சாரு?" கலைந்த வகுப்பறைக்குள் முணுமுணுப்பு கேட்டது.

மதிய உணவிற்கு பின் அறிவியல் பாடவேளை, ஜோதி டீச்சர் வகுப்பிற்குள் நுழைந்தார். கிட்டத்தட்ட எல்லா பாட வேளைகளும் அடி, வசைமாரி என முடியும் போது, சமீபகாலமாக அறிவியல் பாடவேளை மட்டும் விதிவிலக்காக இருக்கிறது. மாணவ மாணவிகளின் முகத்தில் மறுமலர்ச்சி. அறிவியல் பாடத்தில் கதை. படம்... பாட்டு.புதிய விளக்கம்.. கண்டிப்பு... அரவணைப்பு என அனைவரும் ஒன்றிப் போயினர். பெரும்பாலும் மாணவர்கள் படிக்கச் சொன்னதைப் படித்தும், எழுதச் சொன்னதை எழுதியும் வந்தது ஆச்சர்யம். அனைத்திற்கும் காரணம், ஜோதி டீச்சர், பன்ளியில் புதிதாக சேர்ந்துள்ளவர். பெயருக்கேற்ப அறிவு ஒளிரும் முகம். கனிவான பேச்சு. பொறுமை என்று மாணவர்கள் மட்டுமின்றி, சக ஆசிரியர்களிடமும் நற்பெயர்.

ஜோதி டீச்சர் வகுப்பிற்குள் நுழைந்ததும் மாணவர்கள் அனைவரும் குட் ஆப்டர்நூன் டீச்சர்" என்றனர். ஜோதி டீச்சர் "குட் ஆப்டர்நூன் உட்காருங்கப்பா, எல்லாரும் சாப்ட்டீங்களா!" என்றபடி சுரேஷை பார்த்தார். மாணவர்கள் அனைவரும் தலையசைத்தனர். ஈரேஷ் எவ்வித சலனமுமின்றி டீச்சரை முறைத்துப் பார்த்தபடி இருந்தான். ஜோதி டீச்சர் புள்ளகைத்தபடி சுரேஷிடம் நெருங்கினார்.

"சுரேஷ், இங்க வாப்பா. சுரேஷ் வெளியே வந்தான். மாணவர்கள் அனைவரும் சுரேஷ் மீது தங்கள் பார்வையை வைத்திருந்தனர். "ஏப்பா, எழுத வேண்டியத எழுதுங்க.. லீடர் வகுப்ப பாத்துக்க..." சொல்லிவிட்டு சுரேஷின் தோளில் கைவைத்து அழைத்துச் செல்ல முயன்றார். சுரேஷ் கையை வேகமாய் தட்டிவிட்டு முறைத்தான்.

"அட ஒண்ணுமில்லப்பா வா" வலுக்கட்டாயமாய் மீண்டும் தோளில் கை வைத்து நடந்தார்.

சுரேஷ் அமைதியாய் நடந்தான். யாருமில்லாமலிருந்த ஆசிரியைகள் ஓய்வறையில் அமர்ந்த டீச்சர், "இங்க பாரு சுரேஷ்... என்னிய ஒன்னோட அக்காவா நெனச்சுக்க. கேக்குற கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு, பயப்படாத. உண்மைய மட்டும் சொல்லு. மத்த பசங்க, சாருக எல்லாம் ஒண்ணப் பாத்து எதுக்குப் பயப்படுறாங்க. எப்பவும் கோபமாவே இருக்க... தெனமும் யூனிபாம் அழுக்காவே போட்டுட்டு வார... படிக்காத பசங்களெல்லாம் படிக்க ஆரம்பிச்சிட்டாங்க. நீ இப்படி இருக்கக் காரணம் என்னா? அக்காகிட்ட சொல்லு!" என்று இழுத்து பக்கத்தில் நிறுத்தினார்.

சுரேஷின் முகம் இப்போது இளகியிருந்தது. டீச்சரின் முகத்தைப் பார்க்க முடியாமல் தவித்தாள். கண்களிலிருந்து பொலபொலவென கண்ணீர் வழிந்தது.

"ஐயோ சுரேஷ்... அழக்கூடாது... ஏன் இப்படி இருக்கிற என்று சொல்லு" என்றார்.

டீச்சர் எங்கிட்ட இதுவரைக்கும் இப்படி யாரும் பேசினது இல்ல. அஞ்சாப்பு படிக்கிற வரைக்கும் நல்லாத்தான் படிச்சேன். நல்லாத்தான் இருந்தேன். அதுக்கப்புறம்... அதுக்கப்பறம்... எங்கப்பா லோடுமேன் வேலை பாக்குறாரு. திடீர்னு எங்கப்பாவுக்கு குடிக்கிற பழக்கம் வந்துருச்சு. வீட்டுக்கே வராம இருப்பாரு. எப்பயாவது வருவாரு. வேலைக்கு போகாம இருந்த எங்கம்மா வேலைக்கு போக ஆரம்பிச்சாங்க. காலைல நானு எந்திருக்கிறதுக்கு முன்னாலேயே வேலைக்குப் போயிருவாங்க. நானு பள்ளிக்கூடத்துக்கு போகாம மந்தைக்குப் போயிருவேன்...".

விசயம் தெரிஞ்ச எங்கம்மா ஒரு நா "டேய் சுரேசு... ஒனக்காகத்தாண்டா உசிர வச்சிருக்கேன். நீ பள்ளிக்கூடம் போகாட்டி நானு செத்துப் போயிருவேண்டா" ன்னு கதறி

அழுதாங்க. அன்னைக்கிருந்து பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்கா வாரேன். மத்த பசங்க நல்ல சட்ட, டவுசரு போட்டு நீட்டா வருவாங்க. என்னிய எனக்கே புடிக்கல. எங்கம்மா கஷ்டத்த பாத்து நோட்டு, பேனா கேக்க மாட்டேன். எழுதாம படிக்காம வர்றத பாத்த சாருக அடிச்சாங்க. என்னியப் பாத்து சிரிக்கிற பசங்கள நான் அடிச்சேன். ஹெட்மாஸ்டர், மத்த எல்லா சாரும். பொலம்பி சேர்மன் கிட்ட சொல்லி, சேர்மனே பள்ளிக்கூடத்துக்கு வந்து சாருகிட்ட சொல்லி விட்டுட்டுப் போனாரு. "சார் சின்னப் பையன்... கொஞ்சம் விட்டுபுடிங்க. அவன எதும் கேக்கவேணாம். பள்ளிக்கூடத்துக்கு மட்டும் வந்து போகட்டும். டேய்! இங்க வா நீ யாருகிட்டயும் பேசாத, வம்புக்கு போகாத, தெனமும் பள்ளிக் கூடத்துக்கு வந்துரணும் சரியான்னு சொல்லி விட்டுட்டுப் போனாரு.

அன்னைக்கு ராத்திரி எங்கப்பா புல்லா குடிச்சிட்டு வீட்டு முன்னாடி நின்னு "அடியே நான் பத்தாதுன்னு சேர்மன வேற வச்சுருக்கியா ன்னு அசிங்கமா பேசி ஊரே கூடி வேடிக்கை பார்த்தாங்க. எங்கம்மாவ தாறுமாறா அடிச்சிட்டு போயிட்டாரு ஊருக்குள்ள எல்லாரும் எங்கம்மாவையும், என்னையும் சாட பேச ஆரம்பிச்சாங்க, அவமானம் தாங்காம எங்கம்மா ராத்திரில்லாம் அழுகும் அப்பப்ப எங்கப்பா வருவாரு வந்து..

"சொல்லு சுரேசு."

"டீச்சர் அசிங்கம் டீச்சர்... நானு இருக்கிறத கூடப் பாக்காம எங்கம்மாவப் பிடிச்சு இழுப்பாரு.

"இங்க பாருயா பையன் முன்னாடி இப்படியெல்லாம் செய்யாதயா...ன்னு எங்கம்மா அழுதாங்க. அடிக்கடி இது நடந்துச்சி.

"என் மனசு பூராம் எங்கம்மாவோட அழுகையும் ஊருக்காரங்க பேசுற சாடப் பேச்சுமே நெறஞ்சி போச்சு, பசங்க யாரும் என்னோட சரியா பேச மாட்டாங்க... பழகமாட்டாங்க. என்னோட நெஞ்சுக்குள்ள யாரோ கல்லப் போட்டு அமுக்குன மாதிரியே இருந்துச்சு" என்றான் சுரேஷ்

ஜோதி டீச்சர் சுரேஷின் தோளில் தட்டிக் கொடுத்தார். அரவணைத்து தலையைக் கோதினார். இருவர் கண்களிலிருந்தும் கண்ணீர். சுரேஷிடம் புதிய நம்பிக்கை பிறந்திருந்தது. டீச்சர் மனதில் மாற்று வழிக்கான திட்டம் உதயமாகிக் கொண்டிருந்தது.

**தமிழ் மொழியின் தொன்மையையும் பண்பாட்டையும் சிறப்பிக்கும் வகையில் எதிர்வரும் சனவரி திங்கள் 22 முதல் 24 ஆம் நாள் வரை மூன்று நாள்கள் முத்தமிழ் மாநாடு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வை எமது கல்லூரியின் இளநிலை மாணவர்கள் ஒருங்கிணைக்கின்றனர். அறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், தமிழார்வலர்கள் கட்டுரை வழங்கியும், மாநாட்டில் பங்கேற்றும் சிறப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# சிலப்பதிகாரத்தில் அறச் சிந்தனைகள்



**ம.யோக ஸ்ரீ**
இளங்கலை மூன்றாமாண்டு

சங்க கால மக்கள் அறத்தின் வழியில் சிறந்து விளங்கினர். மன்னர்களும் அறத்தின் நெறி தவறாது விளங்கினர்இ தங்களது அறச்செயல்களினாலே இன்றும் நிலைத்து நிற்கின்றனர். அறத்தின் வழி நடந்தால்இ அகிலத்தையும் தன் வசப்படுத்தலாம் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அதியமான் நீண்டநாள் வாழவைக்க கூடிய அரிய நெல்லிக்கனியை, தான் உண்ணாமல் அறிவில் சிறந்த ஔவைக்கு கொடுத்துத் தமிழின் அறத்தைக் காத்தவன். அதனால்தான் இன்றைக்கும் வரலாற்றில் நிலைத்திருகின்றான். அவன் மட்டுமல்லாது, முல்லைக்குத் தேர் கொடுத்த பாரிஇ மயிலுக்குப் போர்வை போர்த்திய பேகன், இரவலர்களுக்குத் தன் நாட்டையே வழங்கிய வல்வில் ஓரி, இரப்பவர்களுக்குத் தனது குதிரையை வழங்கிய மணிமுடிக்காரி, நாகம் தந்த லிங்கங்கத்தை சிவனுக்குக் கொடுத்த ஆய் அண்டிரன் மற்றும் சிரிக்கச் செய்து பிறரை மகிழ்வித்த - நள்ளியக்கோடன் என இவர்கள் அனைவரும் அறத்தின் வழியில் நின்றவர்களுக்கு ஆகச்சிறந்த உதாரணம்.

அறம் – விளக்கம்

‘அறம்’ என்னும் சொல் ‘அறு’ என்ற வினைச்சொல் அடியாகப் பிறந்ததாகும். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. இதனை ஆங்கிலத்தில் ‘Ethics' என்று வழங்குவர். அறம் அல்லது ஒழுக்கநெறி (Morality) என்பது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது தொடர்பான பார்வைகளை குறிக்கிறது. இதை நல்லவை, தீயவை என்பன தொடர்பில் ஒரு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைகளின் தொகுப்பு எனலாம். ஒழுக்கநெறிகள் எல்லாச் சமுதாயங்களிலுமே ஒன்றுபோல இருப்பதில்லை. காலம், நம்பிக்கைகள், பண்பாடு என்பவற்றைப் பொறுத்து இவை வேறுபடுகின்றன. ஒழுக்கநெறிகள், சமூகம், மெய்யியல், சமயம், தனிமனிதரின் மனசாட்சி போன்றவற்றால் வரையறுக்கப்படுகின்றன. 'அறம்' என்பதே தமிழ் சொல் ஆகும். ஆனால், இன்றைய நிலையில் 'அறம்' சொல்லுக்கு மாற்றாக பிறமொழி சொல்லான 'நீதி' என்றச் சொல் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் பயன்படுத்தப்படுகிறது.

**இலக்கியங்களில் அறம்**

இலக்கியத்தில் அறத்திற்கு எத்தனையோ நற்சான்றுகள் இருந்தாலும், தலைசிறந்த அறமாக ஓங்கி ஒலிப்பது குமண மன்னனின் அறமாகும். தன்னை நாடிவந்த புலவருக்குக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்பதற்காகத் தனது தலையை வெட்டிக் கொண்டு போய்த் தன்

தம்பியிடம் கொடுத்தால் பொன்முடி கிடைக்கும் என்று சொன்ன அந்த அறத்தையே மிகப்பெரிய அறமாகக் கருதலாம். இதனை,

*"அந்தநாள் வந்திலை அருந்தமிழ்ப் புலவோய்*
*இந்தநாள் வந்துநீ நொந்தெனை அடைந்தாய்*
*தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்*
*விலைதனைப் பெற்றுன் வறுமைநோய் களைவாய்"*

*-புறத்திரட்டு*

என்னும் பாடலின் வாயிலாக அறத்தினுடைய சிறப்பினை அறிய முடிகிறது.

உலகப் பொதுமறை என்று சொல்லப்படுகின்ற திறக்குறள், மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவே எழுந்த அறநூலாகும். 1330 குறட்பாக்களுமே அறத்தை நிலைநாட்டக் கூடிய அறக்களஞ்சியமாகத் திகழ்கின்றன.

*"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்ற தறம்." (குறள்-35)*

பொறாமை, பேராசை, சினம் (கோபம்), கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கினையும் இழுக்கென எண்ணி மனதிலிருந்து அகற்றுவது, அறவழிக்கு பொறுத்தமானதாகும்.

**சிலம்பில் அறம்**

'குடிமக்கள் காப்பியம்' என்று சிறப்பிக்கப்படும் சிலப்பதிகாரத்தில் அறக்கருத்துகள் மேலோங்கிக் காணப்படுகின்றன. காப்பியங்கள் படைக்கப்பட்டதன் நோக்கமே மக்களை நல்வழிப்படுத்துவதற்குத் தான் என்பதனைச் சிலம்பு பறைசாற்றுகிறது.

**இல்லற அறம்**

குடிப்பிறப்பு, நல்லொழுக்கம், அன்பு, மன உறுதி, மனத்தூய்மை முதலிய பண்புகள் குடும்பத் தலைவன் தலைவியிடம் அமைய வேண்டும். "பொறாமை, கொடுமை, தற்பெருமை, புறங்கூறுதல், சோம்பல், மறதி, அறிவின்மை" ஆகிய குற்றங்கள் இருத்தல் கூடாதென்று தொல்காப்பியர் குறிப்பிடுவார். கோவலன், கண்ணகி இருவரும் நற்குணங்களைப் பெற்று குற்றங்களற்ற தலைமக்களாக விளங்கியுள்ளனர்

*"நாணமும் மடனும் நல்லோர் எத்தும்*
*பேணிய கற்பும் பெருந் துணையாக" (சிலம்பு 16: 86-87)*

என்று கோவலன் கண்ணகியின் இல்லறச் சிறப்பினைச் சிலம்பு எடுத்துரைக்கின்றது.

*"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஒம்பலும்*
*துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்*
*விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (சிலம்பு 16: 71-73)*

என்ற கண்ணகி கூற்றால் இல்லறக் கடமைகளாகிய குடும்பப் பண்புகள் கூறப்பட்டுள்ளன.

குடும்பத்தில் ஆணும் பெண்ணும் இருவருமே ஒழுக்கப் பண்புடன் வாழ வேண்டும் என்பதையும், பெண் கற்புடன் திகழ ஆணின் ஒழுக்கமே அடிப்படை என்பதையும் மாதவி வாயிலாகக் கானல் வரியில் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் ஆண்இ பெண் ஒழுக்கம், குடும்பத்தில் அமைய வேண்டிய

பண்புகள், அகல வேண்டிய குற்றங்கள், குறிப்பாக மனைவியின் இல்லற அறங்கள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

**கற்பு அறம்**

சிலப்பதிகாரத்தின் மையக்கருத்தாக அமைவது கற்பாகும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்ற காப்பிய நோக்கத்திற்கேற்ப, இந்நூலில் கண்ணகி, கணிகையர் குலத்தில் பிறந்தாலும் கோவலனை மட்டும் கணவனாகக் கொண்டு வாழ்ந்த மாதவி, பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவி ஆகிய மூவரின் அறம் உயர்ந்தோரால் போற்றப்படுகிறது. உயர்குடியில் பிறந்தவர்களுக்கு மட்டுமல்லாது குடிமக்களுக்கும் கற்பு உயரிய அறமாகக் கருதப்பட்டுள்ளது. கற்பொழுக்கம் தவறுதலால் இல்லறமும் சமூக அறமும் பாதிக்கப்படும் என்பதை,

*"பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உலகில்*
*கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம்*
*கண்டனர் ஆகிக் கடவுளர் வரைந்த*
*காமம் சார்புஆ காதலின் உழந்து ஆங்கு*
*ஏமம் சாரா இடும்பை எய்தினர்*
*இன்றே அல்லால் இறந்தோர் பலரால்*
*தொன்று படவரூஉந் தொன்மைத்து…"* *(சிலம்பு 14: 39-45)*

என்று ஊர்காண் காதையில் கணவன் மனைவி இருவரும் கூடி அறுசுவை உணவு உண்டு காம இன்பத்தில் இருப்பது மட்டும் பயனைத் தராது. கணவன் பிரிந்து சென்றால் கூட, கற்பொழுக்கத்தை விட்டு நீங்காது இருத்தல் வேண்டுமெனச் சிலம்பு கூறுகிறது. கற்பு என்பது அறத்திலிருந்து பிரிக்கமுடியாப் பண்பாக இருந்துள்ளது.

**அரசியல் அறம்**

அரசாட்சி செய்பவர்களுக்கு அறம் கடைப்பிடித்தல் மிகவும் இன்றியமையாததாகும். சோழர்கள் அறநெறியில் செல்லும் செங்கோலும்இ வீரநெறியிலே செல்லும் வாளும் உடையவர்கள். நடுவுநிலைமை என்ற அறப் பண்பில் சிறந்தவர்கள். அனைவருக்கும் நீதி ஒன்றே என்று உலகத்துக்கு உணர்த்தியவர்கள். ஆகவே தான்இ மனுநீதிச் சோழன் நீதி அனைவருக்கும் ஒன்றேயென்பதைத் தன் மகனைத் தேர்க்காலில், தானே கொன்று அறத்தை நிலைநாட்டினான். சோழ மன்னர்கள் மனிதர்க்கு மட்டுமின்றி ஆருயிர்க்கும் இரங்கியவர்கள். ஒரே சமயத்தில் புறாவிற்கும் பருந்திற்கும் தன்னையிழந்து குறைநீக்கி நிறை உண்டாக்கியவர்கள் ஆட்சியாளருக்குரிய பண்பு நிலையிலிருந்து தவறும்போது இயற்கையிலும் கூட மாற்றங்களும் விளைவுகளும் நேரும் என்பதற்குச் சிலப்பதிகாரம் உதாரணமாக அமைகிறது.

கோவலன் கள்வன் என்று கொல்லப்பட்ட செய்தி கேட்டு அரசவைக்குச் சென்று, *"இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே" (சிலம்பு. 20:26)* என்று கண்ணகி குறிப்பிடுகிறாள். வணிகக் குடியில் பிறந்த பெண், அறத்தை நிலைநாட்ட மன்னனையே எதிர்த்து குரல் கொடுக்கிறாள்.

அன்றைய மன்னர்கள் ஆராயாது தவறான தீர்ப்பு வழங்கி அறநெறி தவறிய நிலையில், தன் உயிரை விடவும் துணிந்த நிலையைக் காண முடிகிறது.

*"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்*
*பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட*
*யானோ அரசன் யானே கள்வன்*
*மன்பதை காக்கும் தென்புலக் காவல்*
*என் முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்..." (சிலம்பு 20: 73-77)*

என்று பாண்டிய மன்னன் தன் உயிரையும் விட்டிருக்கிறான். மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே, மன்னன் நடுவுநிலை தவறாது இருந்தால், நாடு வளம் பெறும்; மக்களும் மகிழ்ந்திருப்பர்.

**உயிர் நேயம்**

பிற உயிர்களைத் துன்புறுத்தாமல், எவ்வுயிர்க்கும் அன்பு காட்டுவதே கொல்லாமை என்பதாகும். செங்குட்டுவனை எதிர்த்துப் போரிட்டுத் தோற்றோடிய ஆரிய அரசர்களைக் " கொல்லாம் கோலத்து உயிர் உய்ந்தோர்" என இளங்கோ குறிப்பிடுகிறார். வயல்களின் வழியோரங்களில் களை பறித்து எறியப்பட்ட குவளைப் பூக்களின் குளிர்ந்த தேனையுண்டு மதுமயக்கத்தில் உள்ள பொறி வண்டினத்தை அறியாது மிதித்தல் பாவம் என்பதை விளக்கும் விதமாகக் அறக்கருத்துகள் காணப்படுகின்றன.

*"குறுநர் இட்ட குவளை அம் போதொடு*
*பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை*
*நெறிசெல் வருத்தத்து நீர் அஞர் எய்தி*
*அறியாது அடிஆங்கு இடுதலும் கூடும்" (சிலம்பு 10 : 86 - 89)*

அதாவது, சாதாரண வண்டினங்களைக் கூடத் துன்புறுத்தக் கூடாது என நினைக்கும் நாம், பிற உயிர்களையும் மதித்து நடத்தல் வேண்டும் என்ற நற்சிந்தனையை அன்றே சிலம்பு நிலைநாட்டியது.

முடிவுரை

தமிழிலக்கியங்கள் காலந்தோறும் நல்லறத்தை மக்களுக்கு வலியுறுத்தி வந்துள்ளன. அறங்கள் அருகி வருகின்ற இன்றைய காலத்தில் அறம் பற்றிய சிந்தனைகள் இன்றியமையாத ஒன்றாகும். மண்ணில் நல்லவண்ணம் வாழவும் வழிநடக்கவும் இச்சிந்தனைகள் பெரிதும் பயன்படும். இவ்வகைச் சிந்தனைகள் இக்காலத்திற்கு மட்டுமல்ல எக்காலத்திற்கும் ஏற்றது நம் பண்டைத் தமிழர் போற்றி ஒழுகிய அறங்களாகும். அவ்வகையில் தமிழின் முதன்மைக் காப்பியமாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் கற்பு, இல்லறம், உயிர் நேயம், அரச மாண்பு போன்ற மனித வாழ்வு உய்வுக்கான பல அறச்சிந்தனைகளை வலியுறித்திச் சென்றமை நமக்குப் புலனாகிறது.


# புத்தக மதிப்புரை

அன்பிற்கினியாள் - சரவணன்



**இரா.புனிதவள்ளி**
**முதுகலை இரண்டாமாண்டு**

நூல்களைப் படிப்பது என்பது அலாதியான இன்பம் பல புதிய அனுபவங்களையும் உணர்வுகளையும் நுட்பமான மாற்றங்களையும் மனத்துள்ளே விதைப்பதில் நூல்களின் பங்கு மிகுதி. ஆனால் அனைத்து நூல்களும் அத்தகைய அனுபவங்களைத் தந்து விடுவதில்லை காரணம் நூலின் கருப்பொருள் எழுத்தாளரின் மொழிநடை அவற்றோடு வாசகனின் மனநிலையும் கோர்த்து ஒரு நூலின் மாண்பை உணர்த்துகிறது. நம் மனதோடு இசைந்து போகக்கூடிய படைப்புகள் தானே நம்மை கவர முடியும். அந்த வகையில் என்னைக் கவர்ந்த படைப்பு அன்பிற்கினியாள்.




"இலக்கியம்" என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி "காலம்" என்பது அதனை உள்ளடக்கிய மனிதர்களின் "வாழ்வியலை" குறிக்கும் ஒரு சிறந்த இலக்கியக் கலைஞன் இலக்கியத்தை இத்தகைய சமூக மேம்பாட்டுச் சார்ந்த குறிக்கோளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறான் தான் வாழும் சமுதாயத்தில் காணும் மனிதர்களையும் நிகழ்ச்சிகளையும் தன்னுடைய சிந்தனையுடன் சேர்த்து கலைவடிவமாக ஆக்கித் தருகிறான் மனித வாழ்க்கை உள்ளவாறே எடுத்துக் கூறுகின்ற கலைஞனின் எண்ணங்களை திருப்திப்படுத்தச் சிறுகதையைப் போல வேறு இலக்கிய வகையாலும் முடிவதில்லை.

குழந்தைகளுக்கு கதை சொல்லியான மதுரை சரவணன் குழந்தைகளுக்கான இலக்கியங்களையே பெரும்பாலும் படைத்து வருகிறார் இதுவரை 11 வகை இலக்கிய நூல்களையும் கல்வி புலமை குறித்த 4 கட்டுரை நூல்களையும் சிறுகதை நாவல் எனத் தனது எழுத்து புலமையை விரித்துக் கொண்டு இருப்பவர். இவருடைய சிறுகதைத் தொகுப்பு "அகிலாவும் பிரேசில் பெண்களும்", பரவலான வரவேற்பைப் பெற்றது. "அன்பிற்கினியாள்" இவரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும்.

சரவணன் அடிப்படையில் ஒர் ஆசிரியர் அதுவும் பள்ளித் தலைமை ஆசிரியர். ஆசிரியராக இருந்தாலும் தன்னை ஒரு குழந்தைகள் உலகச் செயல்பாட்டாளராக மாற்றிக் கொண்டவர். அரசுப் பள்ளிகளுக்குள் இருந்தும் தம் செயல்பாட்டின் மூலம் குழந்தைகளுக்கு பல்வேறு திறன்களைக் கொண்டு போய்ச் சேர்க்கத் தொடர்ந்து இயங்குவதில் சரவணன் தனித்த ஆளுமையாகத் தம்மை வளர்த்துக் கொண்டவர். இவர் தொடர்ந்து குழந்தைகளுக்கான இலக்கியங்கள் படைப்பதில் தனது கவனத்தைச் செலுத்தி வருபவர்.

சந்தேகம் என்பதை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதை முறிமருந்து. அந்த சந்தேகத்தில் இருந்து சுந்தர் என்னும் கதாபாத்திரம் வெளிவர உதவிய காரணங்களையும் சமூகத்தின் வாயிலாகவே சந்தேகம் என்பது தோன்றியதும் அதை சமூகத்தில் நடந்த நிகழ்வை வைத்தே சந்தேகம் என்னும் நோயிலிருந்து வெளிவந்தார் என்பதையும் இச்சிறுகதை கூறுகிறது. ஒரு குடும்பத்திற்குள் பெண்கள், நவீன தலைமுறைப் பெண் குழந்தைகளிடம் வெளிப்படும் நவீனச் சிந்தனைகள் வெளிப்படுகிறது. பெண்களின் உணர்வைப் புரிந்துக் கொள்ளும் வகையில் ஆசிரியர், "புருசன்றவன் உடலோடு கலக்கிறவனில்லை, உறவோடு கலந்து உயிரா இருக்கிறவன்" என்று அழகுறக் கூறியுள்ளார்.

டிபன் பாக்ஸ் என்ற இன்னொரு கதை ரகு என்கிற ஏழை மாணவன் துயரங்களையும், அவனுக்கு ஆசிரியர்கள் உதவுவதுப் பற்றியும் கூறுகிறது. டிபன் பாக்ஸ் மாறிப்போன ஏழை வகுப்புத்தோழன் ரகுவும் அவன் பாட்டியும் பசித்திருப்பார்களே என அவனது வீடு தேடிச் செல்லும் அதே வகுப்பு கனிமொழி என்ற மாணவியின் மன உணர்வும், அவள் அம்மா திட்டுவார் என எண்ணிய கனிமொழிக்கு அவள் தாயின் செயலும் பெரிதும் மனதை இன்புறச் செய்தது. கனிமொழி மற்றும் அவளின் அம்மா இருவரும் மனிதநேயம் சார்ந்து நடப்பதையும் இக்கதை திறம்படக் கூறுகிறது. தற்போதைய சமூகத்தில் மனிதகுலத்தின் மீது இது போன்ற சிறுகதைகள் நம்பிக்கை ஏற்படச் செய்கிறது.

கயிறு என்னும் சிறுகதை சிறிய வயதில் மலர்ந்த காதல் வாழ்க்கையும் அதனால் அந்தப் பெண்ணும் அவள் பெற்ற குழந்தைகளின் நிலை பற்றியும் கலப்பு மனத்தில் விளைந்த குழந்தை ஒன்றின் இறப்பு நோக்கி நகர்வதைச் சற்று வித்தியாசமான கோணத்தில் முன்னிறுத்திச் செல்கிறது. சாதியத்தின் நுணுக்கமான நகர்வுகள், பெண்ணிய உளவியலின் சரடுகள் இந்த கதையின் நுண்ணிழைகளாக மின்னுகின்றன.

இன்னும் எத்தனை வருடங்களுக்கு இக்கதைகளும் கதை மாந்தர்களும் என்னுள் நிழலாடப் போகிறார்கள் என்று எனக்கு தெரியாது இக்கதைகள் பெரும்பாலும் எனது சிறுவயது வாழ்க்கை உணர்வுகளை நினைவு படுத்தியதால் எனக்கு மிகவும் நெருக்கமான நூல் அன்பிற்கினியாள் சிறுகதைத் தொகுப்பு.

## தேநீர்...

நீண்ட நாள் காத்திருந்து
பெற்ற குழந்தை போல,
நீண்ட நேரம் காத்திருக்கிறேன்
வகுப்பறை இடைவெளி எப்பொழுது வருமென...
உன்னைக் கண்டு கையோடு சேர்த்துக் கொள்ள
கையில் சேர்ந்தவுடன் ஒரு புன்னகை
மனிதர்களாலும் தர இயலாத அந்த மகிழ்ச்சி
உன்னைக் கையில் ஏந்தியுடன் கிடைத்தது...

**இரா.புனிதவள்ளி**
முதுகலை இரண்டாமாண்டு

# சைவ மங்கையர் மடங்கள்



**முனைவர் ஜெ.கோகிலா**

உதவிப்பேராசிரியர்

ஏழாம் நூற்றாண்டு காலகட்டத்தில் தமிழகத்தில் சைவ சமயத்தைச் சார்ந்த பெண்கள் தங்கியிருந்து சிவத்தொண்டு செய்வதற்கு எனத் தனி மடங்கள் இருந்தன. அந்த மடங்கள் குறித்து எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திலகவதியார் திருமடம்**

திலகவதியார் திருவாமூர் என்ற ஊரில் வசித்த வேளாளர் குடும்பத்தில் புகழனார் - மாதினியார் என்பவர்களுக்குப் பிறந்த மகள் ஆவார். இவருக்கு அடுத்து பிறந்த மகனுக்கு மருள் நீக்கியார் என்று பெயரிட்டனர். தமக்கையாருக்கும் தம்பிக்கும் வயது வித்தியாசம் அதிகம். திலகவதிக்கு பல்லவ மன்னனின் சேனாதிபதியாக இருந்த கலிப்பகை நாயனாருக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். இந்த சூழலில் திலகவதியின் தந்தை இறந்து போகக் கணவன் இறந்த வருத்தம் தாளாது மனைவியாரும் உயிர் நீக்க திலகவதியாரும் மருள்நீக்கியாரும் அனாதையாக விடப்பட்டனர். எனினும் கலிப்பகையாரின் குடும்பத்தினர் திலகவதியை தங்கள் வீட்டு மருமகளாக ஏற்றுக் கொள்வதில் உறுதியாக இருந்தனர். வடநாட்டிற்கு  போருக்கு செல்ல வேண்டிய சூழலில் இருந்த கலிப்பகையார் வெற்றியுடன் திரும்பி என் திருமண நாள் பரிசாக அதை உங்கள் திருவடியில் சமர்ப்பிப்பேன் என மன்னரிடம் கூறி போருக்கு கிளம்பினார். கடும் போர் நடைபெற்றது. கலிப்பகையாரின் வீரம் கண்டு வடநாட்டு மன்னன் அச்சம் கொண்டான். படைகள் பின்வாங்கி ஓடினர் வீரத்தால் வெல்ல இயலாது எனக் கருதிய மன்னன் அவரை வஞ்சகமாகக் கொன்று விட்டான். கலிப்பகையார் வீர மரணம் அடைந்ததை அறிந்த திலகவதியார் தன் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தார்.

*"எந்தையும், எம் அனையும் அவருக்கு எனைக் கொடுக்க இசைந்தார்கள்,*
*அந்தமுறை யால்அவர்க்கே உரியதுநான் ஆதலினால்*
*இந்த உயிர் அவர்உயிரோடு இசைவிப்பன்." (பெ.பு, திருநா:32)*

என்று கூறி மரணிக்க முயற்சித்த வேளையில் இரண்டு பிஞ்சு கரங்கள் திலகவதியின் கால்களைப் பற்றிக் கொண்டன. பெற்றோருக்கு  பின் சகலமும் நீயே என்று கூறி அக்குழந்தை அழுதது அதனை கண்ட திலகவதியார் தன் தம்பியை வாரி அணைத்துக் கொண்டாள். திக்கற்ற பெண் இவ்வுலகில் வாழ இயலாது எனினும் உனக்காக வாழ்வேனடா! ஆனால் கணவனை இழந்த பெண்கள் எப்படி இந்த பூமியில் கைம்மை நோன்பு பூண்டு வாழ்கிறார்களோ அப்படி வாழ்வேன். அதுவும் உனக்காக என்றார். மருள் நீக்கியை சிவபக்தனாகவும் வளர்த்தார். ஆனால் சைவ சமயத்தை விடுத்து சமணர்களின் சூழ்ச்சியால் வசமான மருள் நீக்கியார் சமண சமயமே சிறந்தது எனக் கூறி வர அதை  கண்டு மனம் வருந்திய திலகவதியார் தாம் பிறந்த திருவாமூரில் சுற்றத்தாருடன் இருந்து கொண்டு சிவத்தொண்டு செய்ய இயலாது என எண்ணி அருகே இருந்த

'திருவதிகை வீரட்டானம்' சென்றடைந்தார். அங்கே சிவன் திருக்கோயிலுக்கு அருகிலேயே நந்தவனம் சூழ அமைந்த ஓர் மடத்திலே தங்கி இருந்து நாள்தோறும் திருப்பணி செய்யத் தொடங்கினார். அன்று முதல் சிவசின்னம் அணிந்து கொண்டார். ஆர்வமுடன் தம் திருக்கையால் திருப்பணிகளைச் செய்து பொழுது புலர்வதற்கு முன் திருக்கோயிலின் முற்றத்திலே திருவலகு இடுதல், பெருக்கி தூய்மை செய்தல், நல்ல பசுவின் சாணத்தினால் மெழுகிடுதல் மலர் பறித்து மாலைகள் கட்டி இறைவனுக்குச் சார்த்துதல் என பல பணிகள் செய்து வந்தார்.

*"புலர்வதன்முன் திருவலகு பணிமாறிப் புனிறகன்ற*
*நலமலிஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு*
*மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்துப்*
*பலர்புகழும் பண்பினால் திருப்பணிகள் பலசெய்தார்" (பெ.பு,திருநா: 44)*

இவ்வாறு இருக்கையில் ஒரு சமயம் தனது தமக்கையைக் காண்பதற்காக வருகை புரிகிறார் நாவுக்கரசர். அப்பொழுது திலகவதியார் நீறு அணியாதவன் முகத்தைக் காணமாட்டேன் என்று திருநீற்றின் பெருமையை உணர்ந்து தன் தம்பியின் முகத்தைப் பார்க்க மாட்டேன் என்பதில் உறுதியாக நின்றார். இந்நிலையில் தனது தமக்கையைக் காணாமலேயே பாடலிபுத்திரம் திரும்பினார் நாவுக்கரசர். சமண சமயத்தை சேர்ந்த தனது தம்பியை மீண்டும் சைவத்திற்குக் கொண்டு வரும்படி திலகவதியார் திருவதிகை பெருமானிடம் வேண்டி நிற்க அதற்கு இறைவனும் திருச்செவி சாய்த்தார் நாவுக்கரசருக்கு சூலை நோய் வரச் செய்தான் இறைவன். சமணர்களால் எதுவும் செய்ய இயலாத நிலையில் தமக்கையாரிடம் திரும்பி வந்தார் நாவுக்கரசர். அவரது திருவடியில் விழுந்தார். இதனைச் சேக்கிழார்,

*"சுலவிவயிற்று அகங்கனலும் சூலை நோய் உடன் தொடரக்*
*குலவிஎழும் பெருவிருப்புக் கொண்டு அணையக் குலவரைபோன்று*
*இலகுமணி மகிற்சோதி எதிர்கொள் திரு வதிகையினில்*
*திலகவதி யார் இருந்த திருமடத்தைச் சென்றணைந்தார்"(பெ.பு,திருநா:62)*

என்று குறிப்பிடுகிறார்.

திருநாவுக்கரசருக்கு திருநீறு அளித்தார் திலகவதியார். அதனை நாவுக்கரசர் தன் உடல் முழுவதும் பூசிக்கொண்டார். பின்பு இருவரும் திருக்கோயில் சென்றனர். அங்கு நாவுக்கரசர் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னும் முதல் திருப்பதிகம் பாடினார். சூலை நோயும் அகன்றது. இவ்வாறு நாவுக்கரசரின் வரலாற்றைச் சேக்கிழார் எடுத்துரைக்கும் இடத்தில் ஏறத்தாழ 35 பாடல்களில் நாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியார் வரலாற்றையும் கூறுகின்றார். இதன் வாயிலாக அக்காலத்தில் சைவ மங்கையர்களுக்கு எனத் தனி மடங்கள் இருந்ததனை அறிய முடிகின்றது.

**பூம்பாவை மடம்**

ஏழாம் நூற்றாண்டில் மயிலாப்பூரில் சிவநேசர் என்பவர் சிவபக்தராக வாழ்ந்து வந்தார். இவருக்கு பூம்பாவை என்ற மகள் இருந்தாள். அருந்தவப் பயனால் பெற்ற தம் மகளை அவர்

தனது மாளிகை தோட்டத்தில் உள்ள கன்னி மாடத்தில் தோழிகளுடன் தங்கச் செய்தார். சைவ சமய தொண்டினை செய்து வரும் திருஞானசம்பந்தருக்கு தனது மகளைத் திருமணம் செய்து வைக்க சிவநேசர் கருதினார். இந்நிலையை தன்னுடைய ஏழாம் வயதில் ஒரு நாள் பூம்பாவை தமது தோழிகளுடன் மலர் பறித்து விளையாடிக் கொண்டிருந்த பொழுது பாம்பு ஒன்று தீண்டி இறந்து விட்டாள். ஞானசம்பந்தர்க்குத் திருமணம் செய்து வைக்க எண்ணி இருந்தமையால் தனது மகளை எரித்த பின்னும் அவளது எலும்பு மற்றும் சாம்பலை நீர் நிலைகளில் கரைக்காது பாதுகாத்து வந்தார் சிவநேசர். ஒரு சமயம் திருவொற்றியூருக்கு திருஞானசம்பந்தர் வருகை புரிவதை அறிந்த சிவநேசர் அவரை நேரில் சந்தித்தார். தனது மகள் பூம்பாவையைச் ஞானசம்பந்தர்க்குத் திருமணம் செய்து வைக்க எண்ணியதையும் ஆனால் அவள் சிறுவயதில் பாம்பு தீண்டி இறந்து விட்டதையும் தற்போது அவளுடைய சாம்பல் மற்றும் எலும்பினை பாதுகாத்து வைத்திருப்பதைப் பற்றியும் எடுத்துக் கூறினார். உடனே திருஞானசம்பந்தர் ***"மட்டிட்ட புன்னையங் கானல் மட மயிலை"*** என்னும் பாடலைப் பாட பூம்பாவை சாம்பலில் இருந்து உயிர் பெற்று வந்தார். 7 வயதில் இறந்த பூம்பாவை 12 வயது பெண்ணாக உயிர் பெற்றார். எனினும் ஞானசம்பந்தர் தானே உயிர் கொடுத்தமையால் பூம்பாவையை இவள் எனக்கு மகள். சைவ நெறியிலே விளங்கும் மணாளனுக்கு மணம் முடித்து தருக என்று கூறி திருமணம் செய்து கொள்ள இயலாது என மறுத்துவிட்டார். ஆனால் பூம்பாவை இதற்கு இணங்கவில்லை. தம் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே இருந்து சிவத்தொண்டு செய்ய முடிவு செய்தார். எனவே மீண்டும் கன்னி மாடத்திலேயே தங்கி தொண்டு செய்து இறுதியில் சிவனடி சேர்ந்தார்.

*"பான்மையால் வணிகரும் பாவை தன்மணம்*
*ஏனையோர்க்கு இசையிலேன் என்று கொண்டுபோய்*
*வானுயர் கன்னிமா டத்து வைத்தனர்*
*தேனமர் போதையும் சிவத்தை மேவினாள்" (திருஞானசம்பந்தர்: 1117)*

என்று பெரிய புராணம் குறிப்பிடுகிறது. இதன் வாயிலாக ஞானசம்பந்தர் காலத்திலும் சைவ மங்கையர்க்கென மடங்கள் இருந்தது என்பது அறிய முடிகிறது.

**சங்கிலியார் திருமடம்**

திருவொற்றியூர் அருகே விவசாயியான திரு ஞாயிறு கிழார் என்பவருக்கு மகளாகப் பிறந்தவர் சங்கிலியார். பிறந்ததிலிருந்து சங்கிலியார் ஒரு தெய்வீக உணர்வோடு வளர்ந்தார். அதனாலேயே அவள் மற்றவர்களை விட வித்தியாசமாகவும் இருந்தார். அவள் அழகான இளம் பெண்ணாகவும் அழியாத நித்தியமான அழகான கடவுளை மனதில் கொண்டவளாக வளர்ந்தாள். நல்லொழுக்கமுள்ள அழகான தனது மகளுக்கு விரைவில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று அவரது பெற்றோர் விரும்பினர். ஆனால் சங்கிலியாரோ தெய்வீகத்தின் மீது கவனம் செலுத்தும் வாழ்க்கையை நடத்த விரும்பினார். சிவபெருமானுக்குத் தொண்டு செய்யவே விரும்பினார். எனவே அவரின் தந்தை திருவொற்றியூர் திருக்கோயிலுக்கு அருகே கன்னி மாடம் ஒன்று அமைத்து அதில் தகுந்த காவலுடன் தனது மகளை இருக்கச் செய்தார்.

*"சென்னி வளர்வெண் பிறையணிந்த சிவனார் கோயிலுட்புகுந்து*
*துன்னுஞ் சுற்றத் தொடும் பணிந்து தொல்லைப் பதியோர் இசைவினால்*
*கன்னி மாடம் மருங்கமைத்துக் கடைசேர் முறைமைக் காப்பியற்றி*
*மன்னும் செல்வம் தகவகுத்துத் தந்தையார் வந்தடி வணங்கி" (பெ.பு.220)*

இந்தக் கன்னி மாடத்திலே இருந்து கொண்டு "திருமலர் மென்மாலை காலங்களுக்கு ஏற்ப அண்டர் பெருமான் முடிச்சாத்துதல் செய்துவந்தார் சங்கிலியார். இவ்வாறு செய்து கொண்டிருக்கையில் தான் சுந்தரர் முன்னை நல்விதியால் அவரை கண்ணுற்றுக் காதல் கொண்டார்.

*"இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்து என் உள்ளத் தொடை அவிழ்த்த*
*திங்கள் வதனச் சங்கிலியைத் தந்து என் வருத்தம் தீரும்" (232)*

எனச் சுந்தர இறைவனிடம் வேண்டி அவரை மணமும் செய்து கொண்டார். இதன் வாயிலாகச் சுந்தரர் காலத்தில் சைவ மங்கையர்க்கென மடங்கள் இருந்தது என்பதை அறியலாம்.

இவ்வாறாகத் திலகவதியார் தன்னை திருமணம் செய்து கொள்ள இருந்த கலிப்பகையார் இறந்து போனதால் அவரை கணவனாக எண்ணியதால் அவர் மடத்திலிருந்து சிவ தொண்டு செய்தார். அதைப் போன்று பூம்பாவையும் ஞானசம்பந்தர்க்கு துணைவியாக அமைய முடியவில்லை என்ற வருத்தத்தால் மடத்தில் தங்கி சிவ தொண்டு செய்தார். நிறைவாக சங்கிலியாரின் வாழ்வும் சைவ மடத்தில் தொண்டு செய்யும் விதமாகவே அமைந்திருந்தது என்பதனை சேக்கிழாரின் பெரிய புராணத்தின் வாயிலாக அறிய முடிகின்றது.

**பன்னிரண்டு / பன்னிரெண்டு எது சரி?**

பத்து + இரண்டு = பன்னிரண்டு. இதைப் பலர் பன்னிரெண்டு என எழுதிவிடுவது தவறு. 'இரண்டு' என்பது பேச்சுவழக்கில் ரெண்டு என ஆகிறது. இந்த நினைவில் வருவது பனிரெண்டு. அது தவறுபட்ட வழக்கு. பன்னிரண்டே சரியானது. இலக்கணப்படி பன்னிரண்டு ஆவதை, பனிரண்டு என்பதும் உண்டு. 'பன்னிரு கையும் பாற்பட இயற்றி' என்பது திருமுருகாற்றுப்படை. ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் உடையவன் முருகன். பனிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வருவது மாமாங்கம்.

நன்றி : **தமிழில் அடிக்கடி நேரும் பிழைகள் – பேராசிரியர் தமிழறிஞர் தமிழண்ணல்**

# கொஞ்சு(ச)ம் ஐக்கூ

கலக்கத்தோடு
முளைக்கிறது விதைகள்
பாய்வது விவசாயி இரத்தம்

பதுக்கிய உணவுண்டு
பெருத்தது பெருச்சாளி
தொப்பையோடு அமைச்சர்கள்

மேகங்கள் ஒன்று சேர்ந்தன
மழைக்காக அல்ல
உன் மழலை பேச்சிற்காக

காத்துக்கொண்டு இருக்கிறேன்
வருமோ? வராதோ?
அரசின் நலத்திட்டம்

காதல்
வாழ்விற்கும் மரணத்திற்கும்
தூதுவன்

தேர்ந்த கைகாரி தான்
சிறு புன்னகைக்கு ஈடாக
உயிரை கேட்கிறாள்

பந்தியில் அனைத்தும் இருந்தது
சாப்பிட முடியவில்லை
காதலியின் திருமணம்

பலரின் அறவணைப்பில்
அணையாமல் எரிகிறது
(சா)தீ



**அ.முகமது இஸ்மாயில்**
இளங்கலை மூன்றாமாண்டு

# சிறுபாணாற்றுப்படையில் தொல் தமிழரின் பண்பாடு



**முனைவர் மா.செல்வத்தரசி**
உதவிப்பேராசிரியர்

பண்பாடுகளில் உயர்ந்த பண்பாட்டினை உடையவர்கள் தமிழர்கள். தன்னலம் கருதாது பிற நலம் காப்பது ஒன்றே தமிழர்களின் செயலாகும். மனிதர்களுள் வறுமை என்பது காலம் காலமாக இருந்து வருகிறது. எத்தனை வறுமைகள் இருப்பினும் தங்களுக்கு உள்ள திறமைகளை மற்றும் பணிகளை வெளிப்படுத்தி வறுமைகளைப் போக்கிக் கொள்கின்றனர். ஒருவருக்கொருவர் வழிபடுத்திக் கொள்வதால் தமிழர்கள் உயரிய பண்பாட்டினை உடையவர்கள் எனலாம். இவ் உயரிய பண்பாட்டுச் சிந்தனை சிறுபாணாற்றுப்படையில் நிறைந்து காணப்படுகிறது என்பதனை வெளிப்படுத்துவதாகக் கட்டுரை அமைகிறது.

**பண்பாடு**

பண்பாடு என்பது பக்குவப்படுத்தப்பட்டது என்பது பொருளாகும். "பண்பாடு என்பதற்கு கழகத் தமிழ் அகராதி சமைதல், உதவுதல், ஏவல் செய்தல், சீர்திருத்தல், சொற்படி செய்தல்" என்கிறது. பண்பாடு ஒழுக்க உணர்வுகளைச் சார்ந்ததாகும். மனம் பக்குவப்பட்ட நிலையில் நல்ல செய்திகள் வெளிப்படுவது பண்பாடு எனலாம் வறுமையின் உச்சத்திலும் கூட பிறருக்கு வழி சொல்லும் பண்பாடு உயரியது என்பதே நோக்கமாகிறது.

**சிறுபாணாற்றுப்படை**

ஆற்றுப்படை இலக்கியங்களில் ஒன்று சிறுபாணாற்றுப்படை ஆகும். இதற்குக் காரணம் சிறிய யாழில் பாலைப் பண்ணை பாடியதால் இப்பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. பாட்டு நூல் வகையினைச் சார்ந்தது. ஓய்மான் நாட்டு மன்னனான நல்லியக்கோடனை நல்லூர் நத்தத்தனார் பாடியது. ஆற்றுப்படை இலக்கணமானது கூத்தர், பாணர், பொருநர், விரலியர் ஆகியோர் பரிசு பெற விளையும் இரவலனிடம் தாம் பெற்ற பரிசில்களைக் காட்டி வழிப்படுத்துவதாகும். இறைவன், வள்ளல் என்று ஒருவருக்கு என்ன தேவையோ அதற்கான வழிப்படுத்தல் எதுவோ அதற்கான தேவையை அறிந்து வழிப்படுத்துவதாகும். செல்லும் வழியின் சிறப்புகளையும், பரிசில் வழங்கும் வள்ளலின் இயல்புகளையும் எடுத்துக் கூறுவர். ஒரு வள்ளலின் உயர் பண்பை வெளிப்படுத்துவதற்கு ஏனைய வள்ளல்களின் தகுதியைச் சிதையாமல் எடுத்துரைக்கும் பண்புமிக்கவர்கள் நம் தமிழ் மக்கள். இவ்வாறு சங்க இலக்கியத்தைப் பதிவு செய்த புலவர்களும் பண்பாட்டில் விஞ்சியுள்ளதைச் சிறுபாணாற்றுப்படை உணர்த்துகிறது.

**புலவரின் பண்பாடு**

பண்டைத் தமிழ் மக்களின் அகம், புறம் சார்ந்த வாழ்க்கையைப் பதிவு செய்தவர்கள். நம் தமிழ்ப் புலவர்கள் அதிலும் சிறுபாணாற்றுப்படை இயற்றிய புலவர் மிகுந்த பண்பாட்டினை

உடையவர் எனலாம். காரணம் நல்லியக்கோடனின் பரிசில் சிறப்பை எடுத்துரைத்த பாங்கு வித்தியாசமானதாகும். வறுமை நிலையில் உள்ள பாணன் தான் பெற்று வந்த பரிசிலைக் காட்டி வழிப்படுத்திய விதத்தில் நல்லியக்கோடனின் பண்பு வெளிப்படுகிறது. நல்லியக்கோடனின் புகழ், வீரம், கொடைப்பண்பு இவற்றை உயர்வு உடையதாகக் காட்டுவதற்கு, கொடைத்தன்மை உடைய சேர, சோழ, பாண்டியர்கள், கடை ஏழு வள்ளல்கள் இவர்களின் கொடை சிறியதாகவும் நல்லியக்கோடனின் கொடை உயரியதாகவும் என்கின்றார். இவற்றில் புலவரின் உயரிய சிந்தனை வெளிப்படுகிறது.

**சேர சோழ பாண்டியர்**

நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் பரிசில் பெற விளையும் பாணனிடம் தான் பெற்ற பரிசில்களைக் காட்டினான். தனது முந்தைய வறுமை நீங்கப் பெற்றதை உரைக்கிறான். மிகச் சிறிய மெல்லிய அடியை உடைய விரலியோடு வருகிற பாணனே! சேரநாட்டு வஞ்சின் நகரம் வளமுடையது. எவ்வாறெனின்,

*"கொழுமீன் குறைய ஒதுங்கி, வள் இதழ்க்*
*கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை" (சிறுபாண், வரி: 41-42)*

சேரனின் நாட்டு வளமானது, பருத்த மீன் துண்டாகுமாறு மிதித்துச் சென்ற எருமை, மிளகு கொடி படர்ந்த பலாமர நிழலில், மஞ்சள் கொடிகளும், மல்லிகைக் கொடிகளும், நிறைந்த படுக்கையில் அசை போட்டுக் கொண்டு தூங்குகிறது. இத்தகைய இயற்கை வளம் மிகுந்தது வஞ்சி நகர். விற் கொடியை இமயத்தில் பொறித்தவன். வலிமையான தோளினை உடைய இவன் குட்டநாட்டுத் தலைவன். இவனது நாட்டில் இத்தகைய வளம் மிகுந்திருப்பினும் தரும் பரிசு மிகச் சிறியதாகும் என்கிறான்.

கொற்கை பகுதியான தென்னகத்தை ஆண்டவன் பாண்டிய மன்னன். நூணா மரத்தை அறுத்துச் செய்யப்பட்ட பூ மாலையைச் சூடியவன். உப்பு வணிக பெண்ணின் குழந்தைகளுடன் குரங்குகள் விளையாடின. பண்டைய தமிழர்களிடம் பண்டமாற்று முறை நிகழ்ந்திருக்கிறது. அதிலும் பெண்களே இச்செயல்களைச் செய்துள்ளனர். வாணிபம் என்ற உயர்ந்த பொருளாதாரத்திற்கு வித்திட்டவர்கள் பெண்கள் எனலாம். தமிழ் நிலை பெற்று விளங்கியதால் மனமகிழ்வுடைய தெருக்களைக் கொண்டான். ஆயினும் பாண்டியன் நெடுஞ்செழியனுடைய நாடு எல்லாவற்றிலும் சிறந்து இருப்பினும் அவன் தரும் பரிசிலும் சிறிது என்றான்.

சோழனின் உறையூர் இயற்கை வளம் மிக்கது. வற்றாத நீர் நிலைகள், தும்பிகள் தன் பெண் துணையை தழுவிக் கொண்டு சீகாமரம் என்னும் பண்ணினைப் பாடிக்கொண்டே இருக்கும். மருத நிலம் சூழ்ந்த கிழக்கு திசையை தமது ஆளுகையாகக் கொண்ட குல வழியில் தோன்றியவன் சோழன். குலம் என்பது "ஒரு மூதாதையரிடமிருந்து வந்தவர்கள் 'கால்வழிக் குழுவினர்' என்று அழைக்கப்படுவர். மூதாதையரிடமிருந்து தொடரும் உறவு குழுவானது குலம் (Clan) என்று குறிப்பிடப்படுகிறது." என்கிறது வாழ்வியல் களஞ்சியம். பகைவரின் மாயக் கோட்டையினை அழித்தவன். தன்னுடைய குடிமக்கள் அங்கிருந்து வேறெங்கும் செல்லாது காத்து வரும் சோழன் செம்பியன் தரும் பரிசும் சிறியதாகும்.

**கடையேழு வள்ளல்களின் பண்புகள்**

பண்டைத் தமிழர் தொடங்கி இன்றுவரையிலும் தமிழரின் கொடை பண்பாட்டின் அடையாளம் கடையேழு வள்ளல்கள். இவர்களது வரிசையில் கொடை பண்பில் இடம் பெறாத நிலையே நிலவுகிறது. வள்ளல்கள் வரிசையில் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவி தனது அரண்மனையே தமிழுக்காக வழங்கியவர் வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவர். கடையேழு வள்ளல்களின் பரிசு சிறிதனவே பாணன் உரைக்கிறான்.

ஆவியர் குலத்தில் தோன்றிய பேகன் வலிமையும் நற்குணமும் நிறைந்தவன். அவனது நாட்டில் காலத்தால் பெய்த மழைக்கு மயில் அகவியதைக் கண்டு அது குளிரால் நடுங்குகிறது என்று போர்வையை வழங்கினான். அஃறிணை உயிருக்கு மதிப்பளிக்கும் பேகன் மனிதர்களை மதிக்கும் பண்பு உடையவன் தான். ஆயினும் அவன் அளிக்கும் கொடையும் சிறப்புடைத்தன்று என்கிறான்.

பறம்பு மலைக்கு அரசனாகிய பாரி வழியில் கிடந்த முல்லைக்கொடிக்குத் தேரை வழங்கியவன். காரி என்பான் வேலினையும் தொடிணையும் வழங்கினான். ஆய் ஆலமர்ச் செல்வனாகிய சிவபெருமானுக்கு வைரக்கல்லையும் நாகம் கொடுத்த ஆடையும் வழங்கினான். அதியமான் தமிழ் மொழியாளரான ஔவைக்கு மனமுவந்து வாழ்நாள் அதிகரிக்கும் நெல்லிக்கனியைத் தன்னலம் பாராது வழங்கினான். நள்ளி, ஓரி ஆகியோரின் கொடை பண்பும் சிறந்தது. இவற்றுக்கெல்லாம் உயரிய கொடை பண்பு கொண்ட ஒருவனும் உள்ளான் அவனே நல்லியக்கோடன் ஆவான்.

**நல்லியக்கோடனின் கொடை பண்பு**

ஓவியர் குலத்தில் தோன்றியவன் நல்லியக் கோடான். இவனது கொடை பாரத்தை உலகமே அறியும். பாரம் என்பது அளவுக்கு அதிகமானது. எனவே அதிகமான கொடையை வழங்குவதால் கொடை பாரம் எனப்படுகிறது. நல்லியக்கோடனை அடைவதற்கு முன்பு.

*"...................................இந்நாள்*
*திறவாக் கண்ண சாய் செவிக் குருளை,*
*கறவாப் பால் முலை கவர்தல் நோனாது,*
*புனிற்று நாய் குரைக்கும், புல்லென் அட்டில்" (சிறுபாண்,129-132)*

எங்கள் வறுமை எவ்வாறு இருந்ததெனின், கண் விழிக்காத நாய்க்குட்டிகள் தன் தாய் நாயின் முகை(லை)யினை பசியாற்றுவதற்கு கடிக்கிறது. ஆனால் உண்பதற்கு ஏதுமில்லா தாய் நாய் வலி தாங்காது குட்டி நாய்களை குரைக்கிறது. சமைக்கும் இடத்தின் கூரை சரிந்து விழாதவாறு கயிற்றால் கட்டி வைத்திருந்தோம். அடுப்படி காளான் முளைத்திருந்தன. பசி துன்பத்தால் கிணை கொட்டும் பெண்,

*"குப்பை வேளை உப்பிலி வெந்ததை,*
*மடவோர் காட்சி நாணிக் கடை அடைத்து,*

*இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்,*

*அழி பசி வருத்தம் வீடப் பொழிவுகள்” (சிறுபாண்,137-140)*

குப்பையில் முளைத்த வேளைக் கீரையை உப்பில்லாமல் சமைத்துப் பிறர்காண நேர்ந்தால் அவர்களது சொற்களுக்கு ஆளாகக் கூடும் என்பதால், கதவடைத்து உண்டோம். இவ்வாறு எங்களுடைய வறுமை நிலை காணப்பட்டது. ஆனால், நல்லியக்கோடனை அடைந்ததால் இப்பொழுது சிறிய கண்ணுடைய யானைகள், பெரிய தேர் இவற்றுடன் நல்லியக்கோடனின் அரண்மனையில் இருந்து வருகிறோம் என்றான் பரிசில் பெற்ற பாணன்.

நல்லியக்கோடன் வழங்கிய தேரில் வந்தார்கள் என்றால் அவன் வழங்கிய பரிசு பொருட்களின் அளவு அதிகம் எனலாம். இத்துடன் நடந்து செல்லும் வழிகளில் விருந்தோம்பல் இருந்தது தமிழர்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்தவர்கள் விருந்தோம்பலானது, “பசி என்பது உயிரியல் நிகழ்வு. இது ஓர் அணு உயிரியான அமீபா முதல் படிமலர்ச்சியின் உச்சநிலையில் இருக்கும் மனிதன் வரை அனைத்து உயிரினங்களிலும் நிகழ்கிறது” என்கிறார் சி பக்தவச்சல பாரதி. பண்டையச் சமூகம் முதல் பசி என்னும் துன்பத்தை மக்கள் அறிந்தவர்கள். எனவே, தாம் போன்று பிறர் பசியால் வாடக்கூடாது என்ற மரபைப் பின்பற்றி வருகிறார்கள். அத்தகையதொரு நிலையில் பிறந்தது விருந்தோம்பல் இத்தகைய விருந்தோம்பல் நல்லியக்கோடன் நாட்டிலும் நிகழ்கிறது.

எயிற்பட்டினத்தில் நுளையர் மக்கள் காய்ச்சி வடிகட்டிய கள்ளினை பரதவர்கள் கொடுத்தனர். விறலியர்கள் குழல்மீன் கருவாட்டினை உண்டு மகிழலாம். வேலூரில் எயினர் குல பெண்கள் புளிக்கறி இட்ட சோறும் இறைச்சியும் தருவர். ஆமூரில் அரிசியில் சமைத்த உணவை நண்டு கலவையுடன் தந்தனர். ஆமூபூர் பிரியாணி இன்றும் பேர் பெறக்கூடியதாக விளங்குகிறது. இன்றைய பிரியாணி தொல் தமிழரிடமும் இருந்திருக்கிறது. இவற்றை எல்லாம் உண்டு விட்டுச் செல்லுங்கள். அவனது ஊரும் மிக அருகில் உள்ளது என்றான்.

**நல்லியக்கோடனின் பண்புகள்**

நல்லியக்கோடன் தன் அரசவையில் சான்றோர், வயவர், பெண்கள், இரவலர்கள் ஆகியோரின் நடுவே அமர்ந்திருக்கக் கூடியவன். செய்நன்றி அறிதல். தீயவரோடு பழகாமை, அச்சம் கொண்டு பணிபவரிடம் இரக்கம் காட்டக் கூடியவன். தன் எதிரில் இரவலாக வந்து நிற்பவர்களின் தேவை அறிந்து கொண்டு கொடை வழங்கக்கூடிய பண்பாளர். பெண்களால் விரும்பக்கூடியவன். பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கி வருபவன்.

நல்லியக்கோடனின் பரிசில் எத்தகையது என்றால், முதலில் மென்மையான ஆடையை உடுக்க தருபவன். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு அடைக்கலம் கொடுத்த மாதரி,

*”மங்கல மடந்தையை நன்னீர் சூட்டி*

*செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டி*

*..............................................*

*தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்”*

அவளை நீராடச் செய்து அஞ்சனமிட்டு நல்லாடை உடுக்கத் தந்தது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

மயக்கம் தரும் கள்ளினையும், வீமன் எழுதிய சமையல் நூலின் முறையினின்று வழுவாது சமைத்த உணவினை சூரிய ஒளி போன்று ஒளிமிக்க பாத்திரத்தில் உணவை வழங்கினான். போர்வை, எருதுகள், பாகனுடன் யானை குதிரை, அணிகலன்கள் அனைத்தையும் பரிசுகளாக வழங்கி, இரண்டடி முன்வந்து செல்க என்று வழி அனுப்பினான்.

நல்லியக்கோடனை அடைந்ததால் தான் நாங்கள் வறுமை நிலையினின்று நீங்கி செல்வ செழிப்புடன் வந்துள்ளோம் என்று பரிசில் பெற்ற பாணன் ஒருவன் பரிசில் பெற விளையும் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துகிறான்.

**முடிவுரை.**

தமிழர்களின் பண்பாட்டு உயர்வு உடையது. காரணம் அவர்களை ஆளும் மன்னன் பண்பாடு மிக்கவன். சங்க இலக்கியத்தைப் பாடிய புலவர்கள் பண்பாடு உடையவர்கள். தொல் தமிழகமும் தமிழரும் இயற்கையோடு வளமான வாழ்வை வாழ்ந்துள்ளனர். நாடு வளமுடன் இருந்ததால் மனிதாபிமானம் உடையவர்களைக் காண முடிந்தது. எல்லா வளங்களும் நிறைந்து இருந்தமையால் அவர்களது பண்பாடும் உயரியதாக நிறைவுடையதாக இருந்தமை புலப்படுகிறது

அடிக்குறிப்புகள்

1. கழகத்தமிழ் அகராதி, ப.641
2. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 7, ப.709
3. சீ.பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.465
4. ஞா.மாணிக்கவாசகன், சிலப்பதிகாரம் தெளிவுரை, ப.272

துணைநூற் பட்டியல்


1. கழகத் தமிழ் அகராதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1964
2. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 7, தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு, தஞ்சாவூர், 1991
3. பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மனிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990
4. மாணிக்கவாசகன், சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம், சென்ன்னை, 2022



# புத்தக மதிப்புரை

பசிகொண்ட இரவு – கி.அமுதா செல்வி

**மு.சிவசங்கரி**

முதுகலை முதலாமாண்டு

பசி கொண்ட இரவு இந்த நூலானது ஒன்பது கதைகளை உள்ளடக்கிய சிறுகதைத் தொகுப்பு. இதில் இடம்பெற்றுள்ள ஒன்பது கதைகளும் பெண்களை மையப்படுத்தி உளவியல் வாழ்வியல் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டிருக்கிறது.

இச்சிறுகதைகளின் தலைப்பு பொருத்தமும் கதைக்கு ஏற்றார் போல அமையப்பெற்றுள்ளது. சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள மூடநம்பிக்கைகளுக்கும் அப்பாற்பட்டுச் சிந்தித்து இருப்பது சிறப்புக்குரியது. குறிப்பாக 'சீதை வேசி ஆகிவிட்டால்', 'பாக்கெட் சாராயம்', 'தீட்டு' போன்ற கதைகளும் கதையின் கருப்பொருளும் சமூக கட்டமைப்புகளை அதாவது சமூகத்தின் மீது கொண்டுள்ள தேவையற்ற கட்டமைப்புகளை உடைத்தெறியும் வண்ணம் அமைய பெற்றிருக்கிறது.





பசி என்பது வெறும் வயிற்று பசியாக மட்டுமல்லாமல் உடலியல் ரீதியாக பெண்களுக்கு ஏற்படக்கூடிய உணர்வு மிகுதியால் அமையப் பெறக்கூடிய நீண்ட இரவுகள்; மகளைப் பிரிந்து செய்யாத குற்றத்திற்காக சிறையில் வாழும் ஒரு தாயின் ஏக்கம்; கௌரவமாக வாழ நினைத்து சுயமரியாதையோடு தவறு செய்ய மறுத்த ஒரு பெண்ணிற்கு நேர்ந்த கதி ; தன் பிள்ளைகளுக்காக தீய வழியில் பணம் சேர்க்க நினைத்த ஒரு பெண்ணின் அவலம்; இவர்கள் இருவருக்கும் இந்த சமூகம் கொடுத்த பரிசு போன்ற கதையின் கரு பெண்கள் என்ன செய்தாலும் இந்த சமூகம் அவர்களுக்கு எவ்வாறு ஊறு விளைவிக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

'தீட்டு' என்ற கதை காரைக்கால் நாகப்பட்டினம் ஏற்பட்ட மறைந்த ஒரு சிறுமியின் உண்மை கதை. ஆனால் அந்தப் பெண் இறந்ததற்கு காரணம் புயல் அல்ல தீட்டு என்று பல காலங்களாக பெண்களின் மீது திணிக்கப்படும் மூடநம்பிக்கைகளே அஎன கதையின் மூலம் பதிவு செய்திருக்கிறார். இந்த ஒட்டுமொத்த சிறுகதைத் தொகுப்பு காலம் காலமாக திணிக்கப்படக்கூடிய அவலங்களை பேசுகிறது. மீனாட்சி அத்தை என்ற கதையினைப் படிக்கும் பொழுது சற்று ஆறுதல் கிடைக்கின்றது. இந்த சமூகத்தில் விதிவிலக்காக உள்ள ஆண்களுக்கு அக்கதை சமர்ப்பணம்.

இந்த நூல் பெண்களை மையப்படுத்தி எழுதப்பட்டிருந்தாலும் இந்நூலை முழுமையாக படிக்க வேண்டியவர்கள் ஆண்களே! ஆணும் பெண்ணும் இயைந்த நாளைய தலைமுறைக்கும் பாதுகாப்பானது. அந்த வகையில் எந்த மிகைப்படுத்துதலும் இல்லாமல் இயற்றப்பட்டிருக்கும் இந்நூல் சமூக சீர்திருத்த நூல்களின் வரிசையில் இடம்பெறும் சிறப்புக்குரியது.

# தீவாளியா?

நரகனைக் கொன்றநாள் நல்விழா நாளா?
நரகன் இறந்ததால் நன்மை யாருக்கு?
நரகன் என்பவன் நல்லனா? தீயனா?
அசுரன்என் றவனை அறைகின் றாரே?
இராக்கதன் என்றும் இயம்புகின் றாரே?
இப்பெய ரெல்லாம் யாரைக் குறிப்பது?
இன்றும் தமிழரை இராக்கதர் எனச்சிலர்
பன்னு கின்றனர் என்பது பொய்யா?
இவைக ளைநாம் எண்ண வேண்டும்.
எண்ணா தெதையும் நண்ணுவ தென்பது
படித்தவர் செயலும் பண்பும் ஆகுமா?
வழக்கம் என்பதில் ஒழுக்கம் இல்லையேல்
கழுத்துப் போயினும் கைக்கொள வேண்டாம்.
ஆயிரம் கோடி ஆண்டு செல்லினும்
தூயது தூயதாம் துரும்பிரும் பாகாது!
'உனக்கெது தெரியும் உள்ளநா ளெல்லாம்
நினத்து நடத்திய நிகழ்ச்சியை விடுவதா? '
என்று கேட்பவனை 'ஏனடா குழந்தாய்!
உனக்கெது தெரியும் உரைப்பாய் 'என்று
கேட்கும்நாள் மடமை கிழிக்கும்நாள் அறிவை
ஊட்டும்நாள் மானம் உணருநாள் இந்நாள்.
தீவா வளியும் மானத் துக்குத்
தீ-வாளி ஆயின் சீஎன்று விடுவிரே!



**புரட்சிப் பாவலர் பாரதிதாசன்**

# சிலம்பில் கண்ணகியின் மாண்பு



**முனைவர் பெ.இந்துராணி**
உதவிப்பேராசிரியர்

காப்பியங்கள் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள் என்று இருவகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஐம்பெருங்காப்பியங்களில் முதற்காப்பியமானச் சிலப்பதிகாரத்தில் கணவனுடைய நலனுக்காகவே வாழ்பவளாகக் 'கண்ணகி' பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. தன் கணவனுக்காகவே வாழ்வை அமைத்து வாழ்ந்து சிறந்த கண்ணகியின் மாண்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கண்ணகி**

பெண் குலத்திற்கு ஒளிவீசும் மாணிக்கம் போன்றவள். தன் கணவனுக்காக மதுரை மாநகரையே அழித்த மாபெரும் பத்தினி கற்புடையத் தெய்வத் திருமகள். இத்தகைய குணம் மற்றும் உயரிய அன்புள்ள, மென்மை உணர்வு, தன்னை அளித்தல் போன்றவை அனைத்தும் ஆணிற்கும் உரியவையாக இருப்பினும், காப்பிய இலக்கியங்களில் பெண்களுக்கென இயம்பப்படுவது அடக்குமுறை வாழ்வேயாகும். இத்தகைய அடக்குமுறையினைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகின்றது. இக்கருத்தினை, **"இந்து மதத்தின் பெண் தெய்வங்கள் கற்புக்கரசிகள். ஆனால், ஆண் தெய்வங்களோ பலதார மண கொண்டவர்கள் என்ற உரிமை வரிகள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன"**(வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.179.). கோவலனிடம் அளவற்ற அன்பினைக் கண்ணகி கொண்டதனால், அவன் மாதவியிடம் சென்றபோதுகூட வெறுப்புக் காட்டிடவில்லை. இந்நிகழ்ச்சிக்கு அடிப்படை பெண்களிடம் திணிக்கப் பெற்றக 'கணவனே கண் கண்ட தெய்வம்' என்ற பண்பாட்டு அடக்குமுறை வாழ்வே ஆகும். பண்டைய மரபுகளை பின்பற்றுதலே பெண்ணிய வளர்ச்சிக்குத் தடைகளாக இருந்து வந்துள்ளன. அது மட்டுமல்லாமல் தன்னைவிட்டு மற்றவளை நாடிய கணவன் மீண்டும் தன்னிடம் வரும் தருணத்தில் ஒன்றும் பேசாமலிருப்பது 'அடக்கம்' என்று கருதப்படுகின்றது. இக்கருத்தானது அடிமை என்னும் அடக்குமுறையைச் சுட்டுகின்றது. இக்கருத்தியிலுக்குக் கண்ணகி உவமைப்படுத்தப்படுகிறாள். ஆடவர்களை எதிர்ப்பது, பேசுவது, சிந்திப்பது, எதிர்வாதம் புரிவது, மறுப்பது, நகைப்பது, ஒப்பனை இழப்பது போன்ற செயல்களை முற்றிலும் துறந்தவளாகக் கண்ணகி காட்சியளித்தனள். இவையாவும் பெண்ணினத்தை ஆணினம் அடிமைத்தனத்துள் வைக்கும் மரபாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**கண்ணகியின் சிறப்பியல்புகள்**

கதைத்தலைவி கண்ணகியை இறையருள் மேவிய சாலினி,

*"கொங்கச் செல்வி குடமலையாட்டி*

*தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து*

*ஒருமா மணியாய் உலகில் தோன்றிய*

*திருமாமணி"        (சிலம்பு, வேட்டுவவரி, அடி.47-50.)*

என்று பாடி, பெண்ணின் பிறப்பைப் பேச மற்றொரு பெண் தயங்கக் கூடாது என்பதற்கு முதல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறாள்.

இறைவனை அல்லாது அழிந்துமடியும் எதனையும் ஒலிக்காது என் நா என்ற உறுதியுடன் வாழ்ந்த கவுந்தியடிகள்கூட கண்ணகியெனும் பெண்ணிடம் சிறப்பு கண்டவிடத்து,

*"கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது*

*பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்"*

*(சிலம்பு, அடைக்கலக்காதை, அடி.143-144.)*

என்று பாடித் தன் மெய்யன்பை வெளிப்படுத்துகிறார்.

குன்றக்குரவையில் கண்ணகியைக் கண்ணுற்றக் குறவர்கள்,

*"சிறுகுடியீரே சிறுகுடி யீரே*

*தெய்வம் கொள்ளும் சிறுகுடியீரே"  (சிலம்பு, குன்றக்குரவை, அடி.11-12..)*

எனப் போற்றுவதன் மூலம் பெண்ணைப் போற்றுவதில் தயக்கம் காட்டாத மக்களாக வாழ்ந்துள்ளார்கள் மானுடப்பிறப்பாயினும் தெய்வமாகக் கருதும் கண்ணகியின் தோற்றம் அவர்கள் மனதில் எண்ணத்தை உருவாக்கியச் சிறப்பும் பெண்ணினத்திற்குப் பெருமை தருவதாகும் என்பதை உணரமுடிகிறது.

**கணவனுக்காக வாழ்தல்**

திருமணமான பெண்கள், தங்களை அழகுப்படுத்திக்கொள்வது கணவனுக்காக மட்டுமே என்பது இன்றைய காலம்வரை வழக்கில் உள்ளது. திருமணமான கணவன், மனைவியைப் பிரிந்துசென்றால் மனைவி தன் அணிகலன்களையும், மகிழ்ச்சியையும் துறந்து, அவன் நினைவிலேயே வாழவேண்டும் என்பதை அன்றையச் சமூகம் வரையறை செய்துள்ளது. சிலப்பதிகாரமானது,

*"அம்செஞ் சீறடி அணிசிலம் பொழிய*

*மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்*

*கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்*

*மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்*

*கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காதினள்"*

*(சிலம்பு, அந்தி மாலை சிறப்பு செய்காதை, அடி.46-50.)*

இவ்வாறு குறிப்பிடுவதன் வழி அறியமுடிகிறது.

அக்காலத்தில் வாழ்க்கைத் துணைவன் அருகில் இருந்தால் மட்டுமே பெண்கள் தங்களை அழகு செய்வதும், அணிகலன்களை அணிவதும் என்ற பழக்கம் வழக்கில் இருந்துள்ளது. கோவலன் மாதவியோடு வாழ்ந்த காலத்தில் கண்ணகி தன் ஒப்பனைகளை எல்லாம் நீக்கி மங்கல அணியைத் தவிர மற்ற அணிகலன்களைக் களைந்து கண்ணீரோடு கணவனின் நினைவில்

வாழ்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. மனைவி அழகுடையவளாக இருப்பதும், அலங்காரங்கள் செய்வதும் கணவனுக்காகவே என்பது கருத்தாகவே இருந்துள்ளது. கணவனைவிட்டுப் பிரிந்திருக்குங்கால் அக்காலப் பெண்டிர் தங்களை ஒப்பனைசெய்து கொள்வதைக்கூட விரும்பாமல் இருந்தனர். கோவலனைப் பிரிந்த கண்ணகி இடையில் மேகலையின்றி, மார்பில் குங்குமம் பூசாமல், நெற்றியில் பொட்டின்றிக் கண்ணிற்கு அஞ்சனம் தீட்டாமல், கூந்தலுக்கு நெய் பெய்யாமல் புனையா ஓவியமாய் காட்சியளித்ததை இளங்கோவடிகள் காட்டுகின்றார். கணவனைப் பிரிந்தபோது தன் அழகையும், ஒப்பனையையும் வீண் என்று ஒதுக்கி வாழவேண்டும். அவ்வாறு வாழ்வதே பெண்களுக்குச் சிறப்பு என்று கண்ணகி வாயிலாக இக்கருத்தியியலை இளங்கோவடிகள் வலியுறுத்தியுள்ளார். இதனைப் போலவே புறப்பாடல் ஒன்றிலும் ஒரு செய்தி இடம்பெற்றுள்ளது.

பெண் என்றாலே மனதிற்குக் காட்சியளிக்கும்படி அணிகலன் அணிந்து அழகுப் பதுமையாக மாறிட வேண்டும். அவளின் அழகைக் கணவன் பார்ப்பதற்கு மட்டுமே என்று விதி வகுத்துள்ள போக்கைக் காணலாம்.

*"எம்மினும் போர் எழிலி இழந்து, வினை எனப்*
*பிறர்மனை புகுவர் கொல்லோ?*
*அறியார் தானே, பூ விலைப் பெண்டே" (புறம் பா.293)*

வாழ்க்கைத் துணைவன் பொருள் தேடச் சென்றாலோ அல்லது போருக்குச் சென்றாலோ இல்லத் தலைவி அழகுப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது அணிகலன்களை என்றும், அணியக்கூடாது என்றும் வரையறுக்கப்பட்டிருந்தது. கணவன் தன் இல்லத்திற்குத் திரும்பும்போது அணிகலன்கள் அணிந்து அலங்காரத்துடன் கணவனை எதிர்ப்பார்த்திருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் மரபுகளாக இருந்துள்ளன. சங்ககாலத்தில் கணவனுக்கு மட்டுமே காட்சிப்பொருளாக விளங்கியவள் இன்று உலகளவில் கண்காட்சிப் பொருளாக்கப்பட்டாள். "பெண் அலங்காரம் செய்வது என்பது மொத்த ஆண்சமூகத்திற்கு என்ற நிலைக்கு மாறிவிட்டது. ஆண்கள் கண்குளிரப் பெண்ணைக் காண்பது என்ற நிலைக்கு உலகமயமாதலில் உலக அழகுராணிப் போட்டி முதல் பல மாதிரிப் போட்டிகள் வரை நீண்டு கிடக்கின்றன. பெண்களின் ஒப்பனைக்கோலம் ஆணாதிக்கத்தின் வக்கிரத்தைப் பூர்த்தி செய்கின்றது" இவ்வாறு பெண்கள் தங்களுக்காக அழகு செய்து கொள்ளமுடியாமல் உலகிற்குக் காட்சிப்பொருளாக மட்டுமே இருந்துள்ளனர் இதே நிலைமையைத் தான் கண்ணகி என்ற பாத்திரமும் சுட்டிக்காட்டுகின்றது.

**இல்லறக் கடமையாற்றுதல்**

கண்ணகி கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில் இல்லறக் கடமைகளை மேற்கொள்ளாமல் இருந்துள்ளாள். இதனைக் கண்ணகி, கழிபேரிரக்கத்தால் கோவலனிடம்,

*"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்*
*துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்*
*விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"*

*(சிலம்பு, கொலைக்களக் காதை, அடி.71-73)*

என்றுரைக்கின்றார் இளங்கோவடிகள். தாங்கள் என்னைப் பிரிந்திருந்ததால் நான் அறவோர்க்கு அளித்தலையும், அந்தணரைப் போற்றுதலையும், துறவோர்க்குப் பணிவிடை செய்தலையும், விருந்தினரை வரவேற்று உபசரித்தலையும் இழந்திருந்தேன் எனக் கண்ணகி கூற்றாகக் கூறப்பட்டுள்ளது. இவை யாவும் மகளிர்க்குக் கணவனைப் பேணுதலும் விருந்தளித்தலும் தவிர்க்க முடியாத இல்லறக்கடமைகள் என்பதை உணர்த்துகின்றன. மேலும், இக்கூற்றின் வழியாக ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது.

**கண்ணகி - விருந்தோம்பல் பண்பு**

சிலப்பதிகாரத்தில் தமிழர்களின் பண்பான விருந்தோம்பல் பண்பு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. சங்ககாலப் பெண்டிர் விருந்தோம்பல் பண்பில் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். குடும்பத்தினர், உறவினருடன் வருகின்ற விருந்தினருக்குத் தேவையான அனைத்தும் கொடுத்து உபசரித்துள்ளதை,

*"ஒலி பெண் கூந்தல் ஒண்ணுதல் அரிவை*
*நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது*
*விருந்தெதிர் பெறுகதில் யானே"*

*(ஐய்யனாரிதனார். பு.பொ.வெ.பா.மா.நூ.எ.306.)*

என்ற பாடலில், அரிவை பருவப்பெண்ணான கண்ணகி நாள்தோறும் விருந்து வருதல் வேண்டுமென நடுகல் வழிபாடு நிகழ்த்துவதைத் தெரிவிக்கின்றது. இதன்வழி விருந்தோம்பல் பண்பு பெண்களுக்குரியச் சிறந்த குணமாக விளங்குவதைச் சிலப்பதிகாரம் எடுத்தியம்புகின்றது.

எட்டிச் சாயலனி மனைவியானவள் வீட்டிற்கு வந்த அடிகளாரை நன்றாக உபசரிப்பதுடன், அவருடன் வந்த குரங்கையும் பாதுகாத்து தன் மக்களைப் போல வளர்த்துவந்தாள். அந்த மந்தி விருந்தோம்பலின் பயனே எட்டிச் சாயலன், அவள் மனைவி இருவரையும் தேவலோகம் சேர்த்தது.

*"தண்டா வேட்கையின் தான் சிறிது அருந்தி*
*எதிர் முகம் நோக்கிய இன்பச் செவ்வியை*
*அதிராக் கொள்கை அறிவனும் நயந்து நின்*
*மக்களின் ஓம்பு, மனைக்கிழத் தீ! என*
*மிக்கோன் கூறிய மெய்ம்மொழி ஓம்பிக்,*
*காதற் குரங்கு கடைநாள் எய்தவும்*
*தானம் செய்வுழி அதற்கு ஒரு கூறு*
*தீது அறுக என்றே செய்தனள்*
*பெருவிறல் தானம் பலவும் செய்து, ஆங்கு*
*எண்ணால் ஆண்டின் இறந்த பிற்பாடு*
*விண்ணோர் வடிவம் பெற்றனள்"*

*(சிலம்பு, அடைக்கலக்காதை, அடி.170-183.)*

இக்கூற்றின் மூலம் விருந்தோம்பல் பண்பு இல்லத்திற்குரிய முக்கியக் கடமையாக இருப்பதை வலியுறுத்துகின்றது. மேலும், இப்பண்பினைக் 'கண்ணகி' மூலம் இளங்கோவடிகள் ஏற்றிக் கூறியிருக்கின்றார்.

*"அறவோர்க் களித்தலும், அந்தணர் ஓம்பலும்*
*துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்*
*விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"*

*(சிலம்பு, கொலைக்களக்காதை, அடி.71-73.)*

தன் கணவனை நோக்கி, நீ ஒழுக்கந்தவறி நடந்ததினால் சமுதாயத்தில் ஓர் இல்லத்திற்குரிய பண்பினை இழந்துவிட்டாய், என்னையும் அந்நிலையில்பிறழச் செய்துவிட்டாய். நம் சமுதாய வழக்கின்படி உபசரிக்கக்கூடிய 'விருந்தோம்பல் முறை உன்னால் கடைபிடிக்க முடியாமற் போய்விட்டது என்று இடித்துரைப்பதன் மூலம், விருந்தினரை உபசரிக்கும்முறை குறிப்பாக ஆண்களைக் காட்டிலும் பெண்களிடத்தில்தான் இருந்துள்ளது என்பதைச் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் பண்பு மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

**கணவன் பிழை பொறுத்தல்**

ஆண் செய்யும் தவறுகளினால் பாதிக்கப்படுவது பெண்களே என்றால் அதில் மிகையில்லை. அவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களுக்குச் சமுதாயத்தில் ஏற்றமில்லை. சமுதாய மரபு நிலையினால் கண்ணகி கோவலனின் குற்றத்தை அமைதியாக ஏற்றுக் கொள்கின்றாள். அதனை எதிர்த்து நியாயம் கேட்கவில்லை. கணவனின் குற்றங்களைப் பொறுத்து வாழ்வது தான் பெண்களின் பண்பு என்று ஏற்றுக் கொண்டாள். இதனையே,

*"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு*
*உருபு நிறுத்த காம வாயில்*
*நிறையே அருளே உணர்வொடு திருவென*
*முறை யுறக் கிளந்த ஒப்பினது வகையே"*

*(தொல்,. மெய்ப்பாட்டியல் நூற்பா 25)*

என்று தொல்காப்பியம் பறைசாற்றுகின்றது. ஆணும் பெண்ணும் ஒத்து இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் வாழ்க்கை சிறந்து காணப்படும் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. இவ்வாறு மரபுவழியாக ஏற்றுக்கொள்ளும் பெண்களின் நிலையினை இன்றையச் சமுதாயத்தில் காணமுடிகின்றது.தொல்காப்பியம், தலைவன் தவறிழைப்பவனாக இருப்பினும் ஏற்றுக் கொளல் வேண்டும் என்பதனை **'மிக்கோனாயினும் கடிவரை யின்றே' (தொல்,. களவியல் நூற்பா 2)** என்று வலியுறுத்துகின்றது. பெண், ஆணை விட இல்லறப் பண்பில் சிறந்து விளங்கக் கூடாது என்ற கருத்தையும் தருகிறது. குறிப்பாக, வாழ்க்கையில் மனைவி கணவனைவிடச் சிறப்பினளாதல் கூடாது என்ற கோட்பாட்டின் அடிப்படை அது. ஆதலால் தான் கணவன் இருக்கும்போது மட்டுமே கண்ணகி விருந்து படைத்துள்ளாள் என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றது. கண்ணகி தெய்வமாகிய தன்மை அனைவரும் அறிந்த செய்தியே. ஆனால், அவள் தன்னை வருத்திக்கொண்டு குடும்பம் என்ற அமைப்பில் தன்னைத்தானே ஈடுபடுத்திக்கொள்ளாமல்

சிதைத்துக்கொண்டாள். மனஉளைச்சலில் சிக்கித் இந்த நிலையைத்தான் ஆணாதிக்கச் சமூகம் வரவேற்கிறது. அவையே சமுதாய மரபாக ஏற்று வருவிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

கற்பின் மரபினைப் பின்பற்றும் சிறந்தவளாக 'கண்ணகி' பெண் என்ற பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. தன்வாழ்க்கையில் பல இன்னல்கள் நேரிட்ட போதும் கலங்காது எதிர்கொண்டு கற்பு நெறிகாத்த பெண்ணாக கண்ணகி திகழ்ந்துள்ளதை அறிய முடிகின்றது.







**ம.ராஜராஜேஸ்வரி**
முதுகலை இரண்டாமாண்டு

# ஆறாத சினம்..

இந்த
21 ஆம் நூற்றாண்டில்
மாறாத இந்த சமூக சீர்கேடு கண்டு
எழு(து)கிறது எனது ஆறாத சினம்

அடக்குமுறையுடன் கூடிய அதிகாரத்தைக்
காணுகையில் எழுகிறது எனது சினம்
ஏக்கத்துடன் ஏமாந்து கொண்டே இருக்கும்
ஏழை மக்களைக் காணுகையில்
எழுகிறது எனது சினம்

சதியைக் கூட விதியால் வென்றிடலாம்
துணையூன்றிய சாதியை
மதியாலும் மாற்றமுடியாத போது
எழுகிறது எனது சினம்

பெண்ணியம் பற்றி எண்ணி எண்ணி பேசும்
கண்ணியமற்ற கயவர்களைக் காணுகையில்
எழுகிறது எனது சினம்



ஆதியில் ஆண்டக் குடியைப்
பாதியில் வந்தவன்
வீதியில் விரட்டி அடிப்பதைக் காணுகையில்
எழுகிறது எனது சினம்

**ரா.அழகுபாண்டி**
இளங்கலை மூன்றாமாண்டு

சட்டம் படித்தும்
வட்டத்திற்குள் வாழும் தலைமுறையைக்
காணுகையில் எழுகிறது சினம்

இத்துணை சினமும் என்னில் எழுகிறது
வீண் மனம் வீரத்துடன் இருந்தாலும்
இவையெல்லாம் வெறும் கண்ணீரில் கரைகிறது

ஐம்புலன்களை ஐவிரலில் அடக்கியது போதும்
ஆறாத சினத்திற்கு ஆளுமையை ஆட்படுத்துவோம்
நாளைய தமிழகத்தை நமதாக்குவோம்!

# மதுரையின் அறிவுத் திருவிழா

மதுரை தமுக்கம் மைதானத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தென்னிந்தியப் புத்தக பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் சார்பாக ஆண்டுதோறும் புத்தகக் கண்காட்சி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டும் மிகச் சிறப்பாகப் புத்தகத் திருவிழா 06.09.2024 முதல் 17.09.2024 வரை நடந்தது. சுமார் 230 க்கும் மேற்பட்ட புத்தகக் காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுக் கலை, இலக்கியம், பக்தி, அறிவியல், தன் முன்னேற்றம், போட்டித் தேர்வு பயன்பாட்டு நூல்கள் என பல்வேறு வகையான நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு சிறப்பாக அமைந்திருந்தது.

மாலை நேரங்களில் தமிழகத்தின் சிறந்த எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் அழைத்துச் சொற்பொழிவு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த மாலை நிகழ்ச்சியில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்களினுடைய கலைத்திறன் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இளம் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு விருதுகள் வழங்கியும் சிறப்பிக்கப்பட்டன.

முதல் முறை புத்தகத் திருவிழாவிற்குச் செல்லும் இந்த சூழல் ஒரு புதுவிதமான உணர்வை மனத்துள் ஏற்படுத்தியது. நண்பர்களுடன் புத்தகக் காட்சி அரங்குக்குள் விளையாட்டுத்தனமாக நுழைந்த நான் அங்கிருந்து புத்தகங்களையும் வாசகர்களையும் பார்த்த பின்னர் என்னுடைய விளையாட்டுத்தனங்களை மறந்து புத்தகப் புதையல்களைத் தேடும் சிந்தனை விளைந்தது. எனக்குப் பிடித்த புத்தகங்கள் என் அம்மாவிற்குப் பிடித்த புத்தகங்கள் எவை? எவை? என தேடும் ஆர்வம் ஏற்பட்டது.

புத்தகக் காட்சி அரங்கில் பிரபல எழுத்தாளர்களையும் புதிய எழுத்தாளர்களையும் சந்தித்து அவர்களோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. குறிப்பாக 'சூல்' நாவலுக்காக சாகித்திய அகடாமி விருது பெற்ற எழுத்தாளர் சோ.தர்மன் அவர்களைச் சந்தித்து உரையாடினோம். அவர் இலக்கியம் மற்றும் தன்னுடைய படைப்புகள் பற்றிப் பேசி வளரும் பிள்ளைகள் எப்படி மொழிக்காகவும் இலக்கியத்திற்காகவும் பங்காற்ற வேண்டும் என்பது குறித்த அறிவுரைகளை எங்களுக்கு அன்புரையாக வழங்கினார். சிறுவர்களுக்கான தனி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது தனித்துவமாக இருந்தது. அரங்கில் இருந்து வெளியேறும் போது இன்று பார்த்த புத்தகங்களை இவ்வளவு இருக்கிறதே! இன்னும் பார்க்காத புத்தகங்கள் எவ்வளவு என்று எண்ணி நான் படிக்க வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து கொண்டேன். உணவை மட்டும்தான் போதும் என்று வாய் விட்டுச் சொல்வார்கள் என்ற ஆனால் இங்கு அறிவுப்பசிக்கு வேண்டிய அத்தனை தீனிகளுமாகப் புத்தகங்கள் நிரம்பி எங்களை சுவாசிக்க அழைத்தன. ஆனால் அவசர பசிக்கு மட்டும் வேண்டிய சில நூல்களை வாங்கி வந்தேன். மன இருள் நீங்கி மன நிறைவைத் தந்த நிகழ்வாக மதுரை புத்தகத் திருவிழா அமைந்தது



**இரா.ஹம்ஷ வர்த்தினி**
இளங்கலை முதலாமாண்டு

இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களை ஒன்றிணைத்து, வாசிப்பின் மகிழ்ச்சியையும் புத்தகங்களின் ஆற்றலையும் கொண்டாடும் வகையில் சங்கம் வளர்த்த மதுரையின் இலக்கியக் கொண்டாட்டத்தில் இவ்விழா முக்கியப் பங்காக அமைந்துள்ளது. கதை சொல்லும் அமர்வுகள் மற்றும் ஊடாடும் விளையாட்டுகள் போன்ற இந்த நடவடிக்கைகள், புத்தகத் திருவிழாவை ஒரு குடும்ப நட்பு நிகழ்வாக மாற்றியது, என்னைப் போன்ற இளம் வாசகர்களைப் புத்தகங்கள் மீது காதல் கொள்ளச் செய்தது.



என்னுடைய கல்லூரி பாடப் புத்தகங்களையும் ஆசிரியர்கள் கூறிய பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட இலக்கியங்களும் தேடி வாங்கி வந்திருக்கிறேன். பல எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் சந்திக்கும் வாய்ப்பு இந்த புத்தகத் திருவிழாவின் வாயிலாக எனக்குக் கிட்டியது. இறையன்பு சைலேந்திரபாபு போன்ற ஆகச்சிறந்த ஆட்சியாளர்கள் எழுதிய புத்தகங்களைப் போட்டி தேர்வுகளுக்குப் பயன்படும் வகையில் வாங்கி வந்திருக்கிறேன். புத்தகத் திருவிழாவில் என் மனதுக்கு நெருக்கமான புத்தகமாக அமைந்த வலியோடு வழி தேடு என்ற நூலை வாங்கி வந்தேன் சாதிக்கத் துடிக்கும் ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கை சிந்தனையை விதைக்கும் கவிதை நூல் வாங்கி வந்த அன்றே சில பக்கங்களை வாசித்து விட்டேன். இந்த ஆண்டில் மறக்க முடியாத மகிழ்ச்சிக்குரிய நாளாக நான் புத்தகத் திருவிழாவிற்கு சென்ற நாள் அமைந்தது.

**க.ராமசுந்தரி**
இளங்கலை முதலாமாண்டு

மதுரை புத்தகத் திருவிழா சமூகத்தில் புத்தகங்கள் மற்றும் இலக்கியத்தின் மீதான அன்பை ஊக்குவிக்கும் ஒரு முக்கிய கலாச்சார நிகழ்வாகத் தொடர்கிறது, ஆசிரியரின் அறிவுறுத்தலால் இதுதான் முதன்முதலாகப் புத்தகத் திருவிழாவில் கலந்து கொள்ளும் நிகழ்வு. பள்ளியில் பாடத்திட்டத்தை மட்டும் படித்துத் தேர்வில் மதிப்பெண் பெற்று தமிழ் இலக்கியம் படிக்க வேண்டும் என்று சேர்ந்தேன். கல்லூரியிலும் படித்து பட்டம் பெற்றால் மட்டும் போதும் என்ற மனநிலையில் இருந்த என்னை நிறையப் புத்தகங்களை படிக்க வேண்டும் என்ற உணர்வைத் தூண்டியது இந்த புத்தகத் திருவிழா தான். வகுப்பறைகளில் ஆசிரியர்கள் மேற்கோள்காட்டி கூறிய படைப்பாளர்களையும் படைப்புகளையும் ஒருங்கே காணக்கூடிய ஓர் இடமாக இந்தப் புத்தகத் திருவிழா நிகழ்வு அமைந்தது. சிறியோர்கள் முதல் பெரியோர்கள் வரை வாசிக்க வேண்டிய பல தரப்பட்ட புத்தகங்களை ஒரே இடத்தில் கண்டது பெரு மகிழ்ச்சி. புத்தகங்களையும் எழுத்தாளர்களோடு பேசி கிடைத்த அனுபவத்தின் வாயிலாக நாமும் படித்து இது போன்ற புத்தகங்களை எழுத வேண்டும் என்ற ஆர்வத்திற்குத் தொடக்கமாய் அமைந்திருக்கிறது இப்புத்தகத் திருவிழா.



**சோ.நிஷா**
இளங்கலை முதலாமாண்டு

# பிழையின்றி எழுதுவோம்

## தேநீர் / தேனீர் எது சரி?

தே + இலை. Tea-தே எனப்பட்டது. தமிழாக்கச் சொல்.

தேன். தேம்,தீம் என்பன இனிமை எனப் பொருள்படுவன. இது 'தேமொழி' எனப்படும்போது தேன்+மொழி ஆகும். 'தே' எனும் வேர்ச்சொல்லை வைத்து, தே + இலை என்றனர். அதனிலிருந்து வடிக்கும் நீரைத் தேநீர் என்றனர். இதைத் தேனீர்க்கடை என எழுதிவைப்பது தவறு. தேநீர்க் கடை எனலே சரியான வடிவம். பிறமொழிச் சொல்லைத் தமிழாக்கம் செய்வது எப்படி என்பதற்கு இது தகுந்த எடுத்துக்கட்டுமாகும். தேனீர்க்கடை என்றால் தேன் + நீர் + கடை = இனிய நீர்க்கடை. அங்கு தேயிலை நீர் கிடைக்காது. எனவே தேநீர்க் கடை என்பது பொருள் பொருத்தமுடையது.


## அருவருப்பு / அருவெறுப்பு எது சரி?

காலில் படத்தகாதது பட்டுவிட்டால் அருவருப்பாக இருக்கும். பல நாள் குளிக்காதவன் பக்கத்தில் வந்தால் வியர்வை நாற்றம் அருவருப்பாக இருக்கும். அருவருத்தலால் முகம் சுளித்து, வெறுத்துப் புறம் போகத் தோன்றும், அதற்காக இதைச் சிலர் அருவெறுப்பு என எழுதுவது தவறு. அருவெறுப்பு என்று ஒரு சொல் இல்லை. இவ்வாறு பிழைபட எழுதுவதைப் பார்க்கும் போது நமக்கு அருவருப்பாக இருக்கிறது. நம்

அரசியல் வாதிகள், அதிகாரிகள், அமைச்சர்கள் அனைவரும் ஊழலின் உச்சத்தைத் தொட்டு, மானத்தை உதறிவிட்டுத் 'தலைமை தாங்குபவர்களாய்'ப் பவனி வந்து, ஊருக்கு உபதேசம் பேசுவதையும் எழுதுவதையும் பார்த்து உலகம் அருவருக்கின்றது. 'கண்ணுக்குள் தூசி விழுந்தால் ஏதோ அருவுவதுபோல் இருக்கும். அராவுதல், அருவுதலிலிருந்து அருவருப்பு உள்ளத்துள் ஏற்படும் அருவுவது போன்ற ஒருவித வெறுப்புணர்வு, சொல்வடிவம் பெற்றுளது. அதை அருவருப்பு என்றே எழுத வேண்டும்.

நன்றி : **தமிழில் அடிக்கடி நேரும் பிழைகள் – பேராசிரியர் தமிழறிஞர் தமிழண்ணல்**




மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்திலிருந்து 1902 முதல் திங்கள்தோறும் வெளிவரும் தனித்தமிழ் திங்களிதழ் 'செந்தமிழ்' வாங்கிப் படிப்பீர்.

தொடர்புக்கு

முனைவர் ஜெ.போ.சாந்திதேவி

முதல்வர் (பொ), செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

மின்னஞ்சல் : principalsenthamilcollege@gmail.com